உ

பரம்பதிதுணை.

# ANUBOGA VYTHIA BRAMAH RAHASIAM

# அநுபோகவயித்திய பிரம்மரகசியம்.

## இரண்டாம்பாகம்.

இஃது

ஜெகந்நாதஸ்தலம்

**கோஷாயி சுவாமிகள்**

அநுக்கிரகத்தின்படி


சிறுமணவூர்

**முனிசாமிமுதலியாரால்**

எழுதி முடிவுபெற்று

பூ. சு. குப்புசாமிமுதலியாரால்



பூவிருந்தவல்லி

**சுந்தரமுதலியாரது**

**PRINTED AT THE**

**Sunthara velasum Press.**

**MADRAS.**

1895.



Registered Copy Right.

இத்தைவாசியுங்கள். உ சத்தையோசியுங்கள்.

நிகழும் மன்மத௵ ஆடி௴ 22௳ தேதியில்

பூரணசந்திரோதயம் திருவோணநக்ஷத்திரம் அமிர்த

யோகம் கூடிய சுபதினத்தில் பிரயாணப்பட கருணைகூர்ந்த

# நோயில்லாவாழ்வு.

யென்னும் புத்தகவிளம்பரம்.

கவனித்துப்படியுங்கள்.............. அவனிமுற்றுந்தருவியுங்கள்

கனமும், குணமும், மனமும்வாய்ந்த தனவான்களே.

இந்த (நோயில்லாவாழ்வு,) யென்னும் புத்தகத்தின் கருத்தும், காராமையும், சுகுணமும், சுந்தரமும், இன்பமும், இயற்கையும், நழுகவிடாமல் முழுமையுமெழுதப் பொழுதுபோமென்றும், இச்சிறியதாளில்பரியாதென்றும் ௸ புத்தகத்தின் அகராதியில் ஒருபங்கைமாத்திரம் எழுதியனுப்பினோம்,—அதாவது, நோயணுகாவிதி, போஜனவிதி, உண்கலவிதி, அன்னவிதி, பாலுண்விதி, தாம்பூலவிதி, சயனவிதி, மாதர்விதி, புணர்விதி, கெற்பவிதி, ஆண்பெண்ணறிவிதி, கருக்குழிவிதி, கருவளர்க்கும்விதி, கெற்பசிகிச்சாவிதி சிசுவளர்க்கும்விதி, கிரகஎந்திரவிதி, தோஷயந்திரவிதி, மண்டலயெந்திரவிதி, ஜாதகவிதி, ஸ்ரீவயித்தியவிதி ஆடவர்வாகடவிதி, ஷர்ப்பத்துவிதி. முறப்பாவிதி, தாதுவிதி, ஜீர்ணவிதி, இப்படி இன்னம் ஒன்பதுபங்குள்ளதாயும், ஒவ்வொரு பங்கிற்கும் அநேகபிரிவுகளாயும் (14) பவுன் கிளேசுகடிதம் டிம்மி (8) பேஜி சைசில் சீர்மையிரும்புஅச்சில் பதிப்பித்து புல்கலிகாபயின்டு செய்ததாயுமிருக்கும், இப்புத்தகம் சர்வமதத்தினர்க்கும், ஒவ்வொன்றிருக்கவேண்டுமென்பது புத்திமான்களறிந்துக்கொள்வதேயன்றி யாம் சொல்லவேண்டியதில்லை, யாவத்திராளுக்கும் வேண்டுமான புத்தகமானபடியால் அலட்சியமான 12-அணா விலை விதிக்கப்பட்டிருக்கிறது, இந்த பனிமாண்டணா ௸ புத்தகத்தின்மேலிருக்கும் டயிடில்பேஜ் ஒன்றிற்கே கொடுக்கலாமென்கிற சந்தோஷத்தை விளைவிக்கும்.

இப்புத்தகத்தை பரிபாலிக்கும் புண்ணியவான்கள் முன்பண மனுப்பவேண்டுவதுடன் தங்கள் ஊர்பேர், உத்தியோகம், இருப்பிடம், விவரமாகத் தமிழ்பாஷையில் எழுதியனுப்பினால் ௸ புத்தகமுகப்பில் கையொப்பக்காரர்களின் பெயர்களை அச்சிடப்படும். ௸ 22௳ சென்ற மறுதினத்தில் போஸ்டுமூலமாய் புத்தகம் அனுப்பிவிடுவோம், ௸ ௳க்குள் பணமும் கையொப்பமும் அனுப்பினால்மாத்திரம் தங்கள்பேர் அச்சிற் பதியும், சர்வமதத்தினர்க்கும் அன்போடுவந்தனந் தந்தனம்.

| | | | |
|---|---|---|---|
| பிரதி 1 - க்கு விலை | 0 | 12 | 0 |
| போஸ்ட்சார்ஜ் அணா-1. வி.பி. போஸ்ட்சார்ஜ் | 0 | 4 | 0 |
| அனுபோகவயித்தியம் பிரதி 1-க்கு | 0 | 8 | 0 |
| வி: பி போஸ்ட்சார்ஜ் | 0 | 3 | 0 |

சென்னை பெரம்பூர்போஸ்ட் வல்லம்பங்காருசெட்டிவீதி, 3- வது, நெ, வீடு, சுந்தரவிலாச அச்சுக்கூடத்தலைவர் பூ, சு. குப்புசாமிமுதலியாரிடத்திற் பெற்றுக்கொள்ளலாம்,

பதில்வேண்டுவோர் ரிப்ளேகார்ட் அல்லது ஸ்டாம்ப் அனுப்பவேணும்.

உ

வேலுமயிலுந்துணை.

---

## ரிஜிஸ்தர் அறிவிப்பு.

அடங்காப் பிரதாபம்பொருந்திய (அனுபோகவயித்திய பிரம்மரகசியமென்னும்) புத்தகமானது ஸ்ரீமான். ஜெ. கோஷாயி சுவாமிகளது, சிஷ்யவர்க்கத்துள் சிரேஷ்டராகிய செழுமணவை நல்லண்ணபரதேசியாரவர்கள் முன்னிலையிற்றானே ஷி யார் உத்திரவின்படி சிறுமணவூர், முனிசாமிமுதலியாரால்யெழுதிய 1, 2, 3, 4, காண்டங்களில் தற்காலம் அச்சிட்டு முடிவுபெற்ற இரண்டு காண்டத்திற்கும் உடைபோருகிய ஷி முனிசாமிமுதலியாரும், சுந்தரவிலாச அச்சுக்கூடத் தலைவராகிய, பூ. சு. குப்புசாமிமுதலியார் ஆக இருவரனுமதியின்றி யாவரும் எவ்விதத்தும் அச்சிடாவண்ணம கனம்பொருந்திய கெவர்மெண்டுசட்டப்படி (**Registered Copy Right**) ரிஜிஸ்தர் காபிரயிட்செய்யப்பட்டிருக்கிறது.

---

# நூலிநுட்பிரிவு.


| | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | மாத்திரைவகைபரணி | 3 |
| 2. | குழம்புவகைபரணி | 19 |
| 3. | செந்தூரவகைபரணி | 32 |
| 4. | மெழுகுவகைபரணி | 35 |
| 5. | பற்பவகைபரணி | 38 |
| 6. | சூரணவகைபரணி | 42 |
| 7. | எண்ணெய்வகைபரணி | 47 |
| 8. | தைலவகைபரணி | 54 |
| 9. | லேகியவகைபரணி | 57 |
| 10. | கியாழவகைபரணி | 62 |
| 11. | வீரியவிர்த்திவகைபரணி | 65 |
| 12. | கண்டாவிழ்தவகைபரணி | 70 |

உ

தேவிசகாயம்.

# அவுஷதங்களின் அட்டவணை.


| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| (மாத்திரைவகைபரணி) | |
| கடவுள்வணக்கம் | 1 |
| பாயிரம் | 2 |
| தசாவதாரபேதி ... ... ... | 3 |
| நவாச்சாரபேதி | 4 |
| காசுக்கட்டிமாத்திரை | 0 |
| பேதிக்குஜெலமாத்திரை | 0 |
| சவுக்கியபேதி | 5 |
| பேதிமாத்திரை | 0 |
| வாலேபேதிக்குளிகை | 0 |
| பூரக்குளிகை | 6 |
| கோரோஜனக்குளிகை | 0 |
| வைரவாளந்தக்குளிகை | 0 |
| வைரவசஞ்சீவிக்குளிகை | 7 |
| சுகானந்தசஞ்சீவிமாத்திரை | 0 |
| ஆனந்தசஞ்சீவிக்குளிகை | 8 |
| அஞ்சனக்குளிகை | 0 |
| அபினிக்குளிகை | 9 |
| திசைமுகக்குளிகை | 0 |
| வாலேசஞ்சீவிக்குளிகை | 0 |
| கட்டுவாதிமாத்திரை | 10 |
| மாந்தக்கழிச்சலுக்கு | 0 |
| சுரஹாரமாத்திரை | 0 |
| சுரகேசரிக்குளிகை | 11 |
| ஊழிமணி | 12 |
| இராஜபூபதிமாத்திரை | 0 |
| இராஜசவுக்கியமாத்திரை | 0 |
| ஜாதிலிங்கமாத்திரை | 13 |
| பாலசஞ்சீவிமாத்திரை | 0 |
| பச்சைகற்பூரமாத்திரை | 14 |
| நவமூலக்குளிகை | 0 |
| அற்புதகற்பூரமாத்திரை | 15 |
| மாந்தக்குளிகை | 0 |
| மூசாம்பரக்குளிகை | 16 |
| கபாடமாத்திரை | 0 |
| வெள்ளைமாத்திரை | 17 |
| மேகவாய்வுகளுக்குமாத் | 0 |
| (குழம்புவகைபரணி) | |
| கவுசிகர்குழம்பு........... | 19 |
| லிங்கக்குழம்பு | 20 |
| வயற்றுவலிக்கு | 0 |
| அண்டவாதம்சூலேக்கு | 0 |
| சூலேமுடக்கிற்கு | 0 |
| வாதசுரத்திற்கு | 0 |
| கிரந்திநோய் ய-க்ஷம் | 21 |
| சுரத்திற்கு | 0 |
| வலிகுன்மத்திற்கு | 0 |
| திமிர்வாதபிடிப்பிற்கு | 0 |
| காமாலேக்கு | 0 |
| கடிவிஷங்கட்கு | 22 |
| பிள்ளையுண்டாக | 0 |
| பேதிக்கு | 0 |
| எலிகடிக்கு | 0 |
| அலர்ஜன்னிக்கு | 0 |
| பெருங்குழம்பு | 23 |
| சுரத்திற்கு | 0 |
| குளிர்சுரத்திற்கு | 24 |
| ரெத்தமூலத்திற்கு | 0 |
| நீரொழுக்கிற்கு | 0 |
| சன்னிகளுக்கு | 0 |

| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| பெரும்பிளவை | 0 |
| மூலக்குத்துக்கு | 0 |
| வாதசூலை | 0 |
| வாய்வுகளுக்கு | 0 |
| சன்னி(மேக)க்கு | 0 |
| தலைபாரம் | 25 |
| சந்தானமில்லாதவர்க்கு | 0 |
| உதிரவாய்வுக்கு | 0 |
| உப்பிசத்திற்கு | 0 |
| பிருமலுக்கு | 0 |
| ஐயாயிரம்விஷக்கடிக்கு | 0 |
| அகஸ்தியர்மகாகுழம்பு | 0 |
| சண்டமாருதக்குழம்பு | 29 |
| சுடுகாடுமீட்டான்குழம்பு | 30 |
| வீரக்குழம்பு | 0 |
| (செந்தூரவகைபரணி) | |
| காளமேகசெந்தூரம் | 32 |
| அன்னபேதிசெந்தூரம் | 0 |
| அன்னபேதிசெந்தூரம் | 33 |
| சண்டமாருதசெந்தூரம் | 0 |
| பஞ்சபாணசெந்தூரம் | 6 |
| லிங்கசெந்தூரம் | 34 |
| (மெழுகுவகைபரணி) | |
| அண்டமெழுகு | 35 |
| குங்குமப்பூமெழுகு | 0 |
| ஒத்தைவிரைவாதமெழுகு | 36 |
| தோஷாமிர்தமெழுகு | 0 |
| வீரமெழுகு | 0 |
| வேறுவிதவீரமெழுகு | 0 |
| (பற்பவகைபரணி) | |
| கற்பூரசிலாத்துபற்பம் | 38 |
| யின்னொருவிதசிலாசத்து | 0 |
| கல்னார்பற்பம் | 39 |
| சிங்கிபற்பம் | 0 |
| சிஞகாரபற்பம் | 0 |
| பற்பவுபயோகவிதி | 0 |
| தாளகபற்பம் | 0 |
| பவளபற்பம் | 40 |
| சிங்கிபற்பம் | 0 |
| லிங்கபற்பம் | 0 |
| வெள்ளீயபற்பம் | 41 |
| (சூரணவகைபரணி) | |
| கபாடசூரணம் | 42 |
| உப்புசூரணம் | 0 |
| யிஞ்சிசூரணம் | 43 |
| கருங்கோழிசூரணம் | 0 |
| உதப்பைசூரணம் | 44 |
| ஸ்ரீதந்தசூரணம் | 45 |
| குங்கிலியசூரணம் | 46 |
| திரிகடுகுசூரணம் | 0 |
| (எண்ணெய்வகைபரணி) | |
| மேகத்திற்குயெண்ணெய் | 47 |
| வெள்ளைக்குயெண்ணை | 0 |
| கொருக்குவெள்ளைக்குயெண்ணை | 48 |
| பொக்குமேகத்திற்குஎண் | 0 |
| பிடிப்புக்குயெண்ணை | 49 |
| விரைவாதயெண்ணை | 0 |
| குளித்தியெண்ணை | 50 |
| வெள்ளெண்ணை | 0 |
| இரசகற்பூரயெண்ணை | 51 |
| மாந்தயெண்ணை | 0 |
| அச்சரத்திற்குயெண்ணை | 52 |
| கரப்பானுக்குயெண்ணை | 0 |
| (தைலவகைபரணி) | |
| அண்டத்தயிலம் | 54 |
| தலைவலிக்குத்தயிலம் | 0 |
| சந்தனாதித்தயிலம் | 55 |
| கழுத்திசுவுக்குதயிலம் | 0 |
| சிங்கித்தயிலம் | 0 |
| (லேகியவகைபரணி) | |
| பித்தயெரிவுக்குலேகிய | 57 |
| உஷ்ணத்திற்குலேகியம் | 58 |
| கரிச்சாலைலேகியம் | 0 |

| அவுஷதங்கள். | பக்கம். | அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|---|---|
| மேகம்(உக)க்கும் லேகியம் | 60 | சுகபேதிக்குளிகை | 71 |
| கைகாப்பிடிப்புக்குலேகி | 61 | கட்டிகளுக்கு | 0 |
| | | பருக்களுக்கு | 0 |
| (கியாழவகைபரணி) | | பருக்களுடைய | 0 |
| | | கட்டிகளுடைய | 0 |
| பித்தசீதளத்திற்குகியாழம் | 62 | வெண்குட்டைசாந்தி | 0 |
| பித்தவாய்வுக்குகியாழம் | 0 | சிரங்கிற்கு | 0 |
| பித்தவாய்வுக்குவேறுகியாழம் | | ரணங்களுக்கு | 72 |
| சாதாரணபித்தத்திற்கு | 63 | தெய்வமோதிரம் | 0 |
| வயற்றுவலிக்கு | 0 | பயம்நீங்க | 0 |
| இரத்தங்கண்டால் | 0 | தொண்டைவலிக்கி | 0 |
| நாவரட்சிக்கு | 0 | நவாச்சாரஉபயோகம் | 0 |
| வாதசுரத்தத்திற்குகியாழம் | 64 | ஷை இரண்டாவது | 0 |
| உஷ்ணவாய்விற்குகியாழம் | 0 | ஷை மூன்றாவது | 0 |
| பல்வலிக்குகியாழம் | 0 | பல்வலிக்கு | 73 |
| | | கீல்வாதசாந்தி | 0 |
| (வீரியவிர்த்திவகைபரணி) | | சர்ப்பத்து | 0 |
| | | ஆராதபுண்ணுக்கு | 0 |
| மதனகாமேசுரக்குளிகை | 65 | படைகளுக்கு | 0 |
| ஸ்தம்பனக்குளிகை | 0 | வாந்திக்கு | 74 |
| தாதுபுஷ்டிக்குளிகை | 66 | நீர்உடைய | 0 |
| அடைக்கலாங்குருவி | 0 | காயகற்பமூலி | 0 |
| வெங்காயஉபயோகம் | 0 | காதுவலிக்கி | 0 |
| ஆண்குறிபெருக்க | 67 | முள்வெளிப்பட | 0 |
| தாதுபுஷ்டிக்கிலேகியம் | 0 | மூலைசிலந்திக்கி | 0 |
| தாதுபுஷ்டிக்கிசூரணம் | 68 | மதிக்கால்ஆசனம் | 75 |
| தாதுபுஷ்டிக்கிசாதிக்கா | 0 | பெரும்பாட்டுக்கு | 0 |
| இன்பமருந்து | 0 | படைகட்கு | 0 |
| தாதுபுஷ்டிக்கி | 69 | மூலரத்தம்நீங்க | 0 |
| குக்கிடக்கருவு | 0 | மேகத்திமிர்வியாதிக்கு | 0 |
| முள்ளாங்கிஉபயோகம் | 0 | ரிணங்களாற | 76 |
| தாதுபுஷ்டிக்கி | 0 | நீரொழுக்கிற்கு | 0 |
| | | வாய்வேக்காட்டிற்கு | 0 |
| (கண்டாவிழ்தவகைபரணி) | | சயித்தியத்திற்கு | 0 |
| | | சாதாரணயிருமலுக்கு | 0 |
| நோய்வராதிருக்க | 70 | வாய்வேக்காட்டிற்கு | 0 |
| நாக்குபூச்சி | 0 | பல்வலிக்கு | 0 |
| கண்ணோயக்கு | 0 | | |

| அவுஷதங்கள். | பக்கம். | அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|---|---|
| சர்பத்து | 77 | திணவுசிரங்கிற்கு | 79 |
| சொரிசிரங்கு, | 0 | பிரசவவேதனைக்கு | 0 |
| அம்மைகாணாதிருக்க | 0 | கருந்தேமலுக்கு | 0 |
| ரிணங்களார | 0 | தலைசிரங்கிற்கு | 0 |
| பெண்கட்கு | 0 | மரித்தபிண்டம்வெளிப்பட | 0 |
| தக்காளியியாழம் | 0 | கெற்பமில்லாதவற்கு | 0 |
| சோம்புகுரணம் | 78 | குட்டிஞல்வர்த் | 80 |
| பேன்சாக | 0 | பல்நோய்க்கு | 0 |
| பல்நோய்க்கு | 0 | வெளுத்தமயிர்கருக்க | 0 |
| தீராதவெள்ளைக்கு | 0 | ஒருதலைவலிக்கு | 0 |
| மயிர்கருக்க | 0 | | |


அவுஷிதங்களின் அட்டவணை

முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை.

# ஆயுள்வேத அரிச்சுவடி

யென்னும்

# அநுபோகவயித்திய

# பிரம்மரகசியம்.

## இரண்டாம்பாகம்.

வணக்கச் செய்யுள்.

அத்தியை முத்திக்கான அருட்பெருஞ் சோதிதன்னை
சித்தியை பாகங்கொண்ட சிவகிரி மூலாதாரப்
பத்தியை பரமஞானம் பாலிக்கு மெங்கோன்றனை
நத்தியே யிரண்டாம்பாகம் நவிலுவேன் படியுளோர்க்கே.

இதுவுமது.

காலமொரு மூன்றினையுங் கடந்தஞானக்
கடவுளர்தன் னடிபணிந்துக் கருத்துளோர்க்கு
ஞாலமதில் அநுபோக வயித்தியத்தை
நாடுமிரண் டாம்பாகம் நவிலுதற்குப்
பாலமுர்த மீந்தருளும் சத்திவாலைப்
பராபரியா ளிருகமலம் பணிந்துவாழ்த்திச்
சீலமுள முனிவர்நவ நாதர்சித்தர்
செய்யதிருச் சீர்பாதஞ் சென்னிசேர்ப்பாம்.

# பாயிரம்.

சென்னிமிசை நாதாக்கள் பாதம்சேர்த்து
செப்புமிரண் டாங்காண்ட செய்திதன்னில்
உன்னிதமாங் குளிகைவகை பரணியோடு
உயிர்கொடுக்கும் சஞ்சீவிக் குழம்பின்மார்க்கம்
தன்னியஞ்சேர் சிந்தூர மெழுகுபற்பம்
தாதுவிர்த்தி யாம்பரணி தன்னேடொக்க
பின்னமிலா சூரணங்கள் பெருமைதன்னை
பேசவினி நாவுண்டோ பூமியோர்க்கே, (1)

பூமிமிசை பிரவிதரித் திரன்தனக்கு
புதைநிதியங் கிடைத்தாற்போற் பொதுவதாக
நேமித்த வனுபோக யிருகாண்டத்தை
நேரறிந்து செய்தவரே நிதியோராவர்
காமியொடு தலைவணங்காச் சாமியானேர்
கற்றகவிச் சொல்லிகர குற்றமாய்வர்
வாமிசிவ காமியருள் வேண்டும்பேர்கள்
வையமிசை யெத்தொழிலும் வழிகாண்பாரே. (2)

வழிப்பட்டு பெரியோரை வணங்கல்வேண்டும்
வருள்சுரந்த நாதாக்கட் கிணங்கல்வேண்டும்
தொழிற்பட்டு யெவ்வழியுந் துடரல்வேண்டும்
தொல்லுலகில் சிரியோர்போற் சுருங்கல்வேண்டும்
செழித்தவளஞ் சிறுமணவூர் முனிசாமிச்சொல்
செந்தமிழி னனுபோக வயித்தியந்தான்
கழித்தமுரை யானலும் அரிவின்மிக்கோர்
கைக்கொள்வார் ஆனந்த மெய்க்கொள்வாரே. (3)

உ

வேலுமயிலுந்துணே.

# முதலாவது

# மாத்திரைவகைபரணி.

அல்லது குளிகையெனக்கொள்க.

## தசாவதாரபேதி.

| இவை பச்சையாகக்கூட்டவும், | | | இவை வருத்துக்கூட்டவும், | | |
|---|---|---|---|---|---|
| 1 - தாளம் | விராகனிடை- | க | பெருங்காயம் | விராகனிடை- | க |
| 2 - மனேசிலே | ,, | க | கடுகுருணி | ,, | க |
| 3 - இரசம் | ,, | க | திப்பிலி | ,, | க |
| 4 - வெண்காரம் | ,, | க | கருஞ்சிரகம் | ,, | க |
| 5 - இந்துப்பு | ,, | க | வாளம் | ,, | கூ |

இவை-ய-தினுசில்(கூ)ம்-வகைக்கி விராகனிடையாக நிருத்தெடுத்துக்கொண்டு முதற்கலத்தில்காட்டியநெம்பரைப்போல் முதலாவது தாளகத்தை கல்வத்திலிட்டரைத்து பிரகு மனேசிலேஇரசம், வெண்காரம், இந்துப்பு, இப்படிஐந்துங்கலக்கவரைத்துக்கொண்டு இரண்டாங்கலத்தி லரைந்த கற்கவகை (ச) தினுசை இளம்வருப்பாக வருத்து சேர்த்தரைத்து வாளத்தை குற்றமின்றி சுத்திசெய்து (கூ) விராகனிடை நிருத்தெடுத்து மற்றசரக்குடன் ஒக்கப்போட்டு இரண்டுஜாமம் அறைக்கவேண்டியது மோரும்சாதமும் திருப்தியாக சாப்பிட்டு அறைக்கவும் ஜாமக்கணக்கு சரியாய்முடிந்தவுடன் மாட்டுக்கொம்புசிமிளியில் வைத்துக்கொள்ளவும் குன்றிப்பிரமாணம் யெடுத்து பனவெல்லம் அல்லது சற்கரையில்வைத்து சாப்பிடலாம் பேதியதிகமானல் வசம்புசுட்டு கியாழம்கொள்ளவும் இரைச்சி சூப்பு, கத்திரி, முருங்கை, அவரை, இதுகளின்பிஞ்சு முளகுநீர் கூட்டாமல் மாலேயில் மிளகு யிளம்வருப்பிட்டு சுக்குகட்டிப் போட்டு கியாழம் சாப்பிடவும்.

மலஜெலங்கட்டினுல்

## நவாச்சாரபேதி.

நவாச்சாரம்-பலம் (க) கல்வத்திலிட்டு கொடிக்கள்ளிபால் விட்டு விளக்கெண்ணெ (ங) அல்லது (ரு) துளிவிட்டு ஒருஜாமம் அறைத்து மாட்டுக்கொம்பு சிமிளியில் வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) குண்டுமணிப் பிரமாணம் யெடுத்து பழய வெல்லம் அல்லது கூழு இதுகளில்வைத்து சாப்பிடவும் பேதி யதிகமானுல் யெலுமிச்சம்பழச்சார் அல்லது புளித்தமோர்சாதம் சாப்பிடவும் (தீரும் வியாதியாவன) மலக்கட்டு, ஜெலக்கட்டு, பெருவயர், வாய்வுகட்டி, மகோதரம், நீராம்பல், இவைதீரும், இச்சாபத்தியம்.

---

பேதிக்கு

## காசுக்கட்டிமாத்திரை.

காசுக்கட்டி விராகநிடை (௰உ) சுத்திசெய்தவாளம் விராகநிடை (சு) தேன்விட்டு ஒருஜாமம் அறைத்து குண்டுமணிப் பிரமாணம் மாத்திரைசெய்து சீசாவில் வைத்துக் கொள்ளவும் (அனுபானம்) ஒருமாத்திரையை பொடித்து வாயில்போட்டு கொஞ்சம் ஜெலம் குடிக்கவும் பேதியாம் வயிற்றுவலி, வாந்தி கடினமானபேதிகண்டால் யெலுமிச்சம்பழச்சார் குடிக்கவும் நிற்கும் அல்லது குளிர்ந்தஜெலத்திற் குளித்துவிட்டு மோர்சாதம் சாப்பிட நிற்கும் மாலையில் மிளகுகியாழம் சாப்பிடவும்.

---

## பேதிக்கு ஜெலமாத்திரை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜாதிலிங்கம் | விராக - | க | மிளகு | விராக - | க |
| இரசபற்பம் | ,, | க | வெண்காரம் | ,, | க |
| சுக்கு | ,, | க | சிற்றுமணக்குபருப்பு | ,, | க |
| திப்பிலி | ,, | க | சுத்திசெய்தவாளம் | ,, | எ |

இவைகளை கல்வத்திலிட்டு குளிர்ந்தஜெலம்விட்டுஒருஜாமம் அறைத்து குண்டுமணிப்பிரமாணம்மாத்திரைசெய்து சீசாவில்

வைத்துக்கொள்ளவும் (அநுபானம்) ஒருமாத்திரை யெடுத்து கொஞ்சம் வாழைப்பழத்திற்குள்வைத்து சாப்பிட்டு உடனே கொஞ்சம் குளிர்ந்தஜெலம் குடிக்க பேதியாகும் பேதியதிகமானல் சுடுதண்ணீர் குடிக்க பேதிகட்டும் வென்னீரில் குளித்து மோர்சாதம் சாப்பிடவும் மாலையில்மிளகுகியாழம்சாப்பிடவும்.

---

கிருமிகள்விழ

## சவுக்கியபேதி.

சித்தாமணக் கெண்ணெயும் பசும்பாலும் சமயிடையாய் சேர்த்து நன்ருய்க்கலந்து ஒருசிட்டிக்கைகற்கண்டுபொடிபோட்டு சாப்பிட சவுக்கியமாகும் இளப்புஆயாசமில்லாமல் பேதியாகும் நாக்குபூச்சியென்னும் கிருகள் கட்டுகட்டாய் வெளிப்படும் இரச்சி சூப்பு மிளகுநீர் இவையாகும் கத்திரி அவரைமுருங்கை இதுகளின் பிஞ்சு சேர்த்துக் கொள்ளலாம் மாலையில் சுக்குமிளகுகியாழம் சாப்பிடவும்.

---

குழந்தைகள்ஊதுமாந்தத்திற்கு

## பேதிமாத்திரை.

நெல்லிகெந்தகம் விராகனிடை (வ) இரசம் விராகனிடை (வ) வெண்காரம் விராகனிடை (வ) சுக்குவிராகனிடை (வ) சுத்திசெய்த வாளம் விராகனிடை (க) குளிர்ந்ததண்ணீர்விட்டரைத்து பாசிப்பயர்பிரமாணம் மாத்திரைசெய்து ஒரு மாத்திரை தண்ணீரிலுறைத்துக் கொடுக்கவும் ஊதுமாந்தம்தீரும் பேதியாம் பொருமல் வாதம் யிவையெல்லாம் தீரும்.

---

## வாஸபேதிக்குளிகை.

மிளகு விராகனிடை (ரு) வாளம்விராகனிடை (ரு) சுக்கு ஓமம், ரோகணி, ஆமையோடு, கோஷ்டம், வகைக்கி விராகனிடை (க) பழச்சார்விட்டரைத்து மிளகுபிரமாணம் மாத்திரை செய்துவைத்துக்கொள்ளவும் ஒருமாத்திரையை முலைப்பாலில்

யிழைத்து குழந்தைகளுக்குகொடுக்க பேதியாகும் சன்னிசுரம் சீதசுரம்தீரும் அதிகமானல் வெண்னீர்சாதம் கொடுக்கவும.

## சுரங்களுக்கு பூரக்குளிகை.

ரசகற்பூரம், ரசச்செந்தூரம், லவுங்கம், சுக்கு, திப்பிலி, மிளகு, வகைக்கி விராகநிடை (க) இஞ்சிச்சார்விட் டறைத்து ஏலரிசியளவு மாத்திரைசெய்து சீசாவில்வைத்துக்கொள்ளவும் இஞ்சிசுரசம், தேன், முலைப்பால், இதுகளில் ஒருமாத்திரையி ழைத்துக் கொடுக்கவும் எந்தசுரமும் தீரும் சிறுபிள்ளைகளுக் கும் ஆகும், கடும்சுரம் அல்லது அசாத்தியசுரத்திற்கு கடும்ப த்தியம் மெதுவானசுரங்களுக்கு இச்சாபத்தியம்.

## கோரோசனக்குளிகை.

| | |
|---|---|
| கோரோஜனம் | அப்ரேகம் |
| குங்குமப்பூ | ஏலம் |
| கற்பூரம் | கோஷ்டம் |
| ரசச்செந்தூரம் | கிராம்பு |
| பச்சைகற்பூரம் | அக்கிராகாரம் |

இவை (ய) தினுசுகளும் வகைக்கிவிராகநிடை (க) வீதம் நிருத்தெடுத்து சந்தனத்தூள் கியாழம்விட்டு (ச)ஜாமம்அறை த்து லவுங்கப்பூகியாழம்விட்டு (உ) ஜாமம்அறைத்து செண்பக ப்பூகியாழம்விட்டு (உ) ஜாமம்அறைத்து குண்டுமணியளவு மா த்திரைசெய்துநிழலிலுலர்த்தி செப்புடப்பியில் வைத்துக்கொ ண்டு முலைப்பாலில் (க)மாத்திரை உரைத்துக் கொடுக்கவும் தொண்டைக்கட்டு, சிலேட்டுமம், ஜன்னி, நீர்தோஷம், சிலே ட்டுமசுரம், வாதசுரம், இவைதீரும் பத்தியம் நோயின் திடமரி ந்து வைக்கவும்.

சுரங்கள் சன்னிக்கு

## வைரவாநந்தக்குளிகை

| | |
|---|---|
| சுக்கு | இரசம் |
| திப்பிலி | நாவி |
| மிளகு | நெல்லிகெந்தகம் |
| வெண்காரம் | ஜாதிலிங்கம் |

இவைகளை கிரம்ப்படி சுத்திசெய்து வகைக்கு (க) விராகனிடையாக நிருத்து எலுமிச்சம்பழச்சார்விட்டரைத்து உளுந்துப்பிரமாணம் மாத்திரைசெய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும்(அனுபானம்) இஞ்சிசுரசம், தேன், முலைப்பால்,பஞ்சமூலகியாழம் இவைகளி லெதிலேனும் (க) மாத்திரை யிழைத்துக்கொடுக்கவும் நோய்க்குத்தக்கவாறு யோசித்து இரண்டுவேளை கொடுத்தாலும் கொடுக்கலாம் ஜன்னி, சுரம், சிலேற்பனம் தீரும் கைப்பு புளிப்பு மாங்கிஷம் நீக்கவும்.

---

## வைரவசஞ்சீவிக்குளிகை

வாளம் விராகனிடை (அ) சுக்கு, திப்பிலி, மிளகு, வெண்காரம். நாபி, ரசம், கெந்தி, வகைக்கு (க) விராகனிடையாக நிருத்தெடுத்து கரிச்சாலைசார்விட்டு (அ) ஜாமம் அறைத்து மிளகுபிரமாணம்மாத்திரைசெய்து சீசாவிலடக்கம்செய்யவும் (அனுபானம்) இஞ்சிரசத்தில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்கலாம் அல்லது திரிகடுகு லவுங்கம் தாளிசம் இவைகளை வருத்துப்பொடித்து திருகடிபொடியில் ஒருமாத்திரையை பொடித்துவைத்துக்கொடுக்கலாம் பித்தசுரங்களும் ஜன்னியும் போம் வாதசுரத்திற்கு முலைப்பாலில் ஒருமாத்திரை யிழைத்து துளிதேன்விட்டுகொடுக்கவும் சீதளத்திற்கு சன்ருஷ்டக கியாழத்திற்கொடுக்கவும்.

அஜீரணம் மந்தத்திற்கு ஓமப்பாலில் கொடுக்கலாம் மாசிப்பத்திரி கியாழத்தில் கொடுக்க மாரல் சுரம் தீரும் இச்சாபத்தியம்.

---

## சுகாநந்தசஞ்சீவிமாத்திரை

இரசம் அரிதாரம் கெந்தகம் நாபி துத்தம் மனோசிலை வெண்காரம் கோஷ்டம் வகைக்கு விராகனிடை(க) நிருத்தெடுத்து கிரமப்படி சுத்திசெய்து பழச்சார்விட்டு(எ)நாள்அறைத்துமிளகளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும்(அனுபானம்) தேன், இஞ்சி, முலைப்பால், பன்னீர்

குளிர்ந்தநீர், துளசிச்சார், லவுங்கக்கியாழம் இதுகளில்யெதிலேனும் கொடுக்கலாம் சர்வசுரத்திற்குமாகும் பத்தியம் அரிந்துவைக்கவும்.

## ஆனந்தசஞ்சீவிக்குளிகை.

| | | |
|---|---|---|
| அரசம் | அரிதாரம் | கெந்தகம் |
| நாபி | வெண்காரம் | தாணிக்கா |
| சுக்கு | வருத்தமிளகு | திப்பிலி |

இவைகள் வகைக்கி (க) விராகனிடையாக நிருத்து சுத்திசெய்த வாளம் விராகனிடை (ரு) இவையாவும் கல்வத்திலிட்டு ஒருநாளைக்கி ஒருஜாமமாக (எ) நாள் அறைத்து பயரளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவில்வைத்துக் கொள்ளவும் (அனுபானம்) மூலவாய்வுக்கு ஜாதிக்காய் கியாழம் சிறுநீரில்கொடுக்கவும் சூலைக்கி முருங்கப்பட்டைசாற்றில் கொடுக்கவும் வலிகுன்மத்திற்கு நொச்சிசாற்றில் கொடுக்கவும் குளிருக்கு தாணிக்காய் சாற்றில் கொடுக்கவும் மலக்கட்டுக்கு .விளக்கெண்ணெயில் கொடுக்கவும் க்ஷயத்திற்குவெள்ளாட்டுப்பாலில்கொடுக்கவும் பாம்புகடிக்கு எலுமிச்சம்பழச்சாற்றில் கொடுக்கவும் பத்தியம் நோய்க்குதக்கவாறு பார்த்துவைக்கவும்.

சூசு-சுரத்திற்கும்

## அஞ்சனக்குளிகை.

| | | | |
|---|---|---|---|
| இரசம் | நாபி | அரிதாரம் | வெண்காரம் |
| கெந்தி | திரிகடுகு | திரிபலை | வெள்ளுள்ளி |

இவைகள் வகைக்கி விராகனிடை - க, இவைகட்கு சரியிடைவாளம் யாவும் கிரமப்படி சுத்திசெய்து கல்வத்திலிட்டு கரும்புச்சார்விட்டு ஒருநாளைக்கி இரண்டுஜாமம்விழுக்காடு மூன்றுநாளைக்கி அறைத்து குன்றிப்பிரமாணம் மாத்திரைசெய்து சீசாவில்வைக்கவும் (அனுபானம்) நெய் தேன் திரிகடுகு கியாழம் இதுகளில் (க) மாத்திரை கொடுக்கவும் பத்தியம் தேகதிடமும் சுரங்களின் உதட்டியும் பார்த்து வைக்கவும்.

## சுரங்கட்கு அபினிக்குளிகை.

அபினி விராகனிடை (௬) சுக்கு விராகனிடை(எ) திப்பிலி விராகனிடை (அ) சீரகம் விராகனிடை (௬) மிளகுவிராகனிடை (ய) இவைகளை விஷ்ணுகாந்திசார்விட்டு (௪)ஜாமம் அரைத்து குன்றியளவு மாத்திரைசெய்துநிழலிலுலர்த்திசீசாவில்வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) விஷ்ணுகாந்தி, சீரகம், வெத்திலைக்காம்பு கியாழம்வைத்து அதில் ஒருமாத்திறை யிழைத்துக் கொடுக்கவும் இப்படி காலைமாலை இருவேளையும் ௩-நாள் கொடுக்கவும் கழிச்சல், தாபசுரம்தீரும் சிறுவர்களுக்கும் ஆகும் புளி தள்ளவேண்டியது (௩) நாட்சென்றால் வேகம் மெத்தவுண்டாகும் முன்சொல்லிய கியாழம் செய்து மிளகுதூள் போட்டுக்காச்சி மாலையில் ஒருவேளையாக (௩) நாள்சாப்பிடவும்(எ) வதுநாள் சுட்டபுளி கூட்டவும்.

---

## திசைமுகக்குளிகை.

பச்சை கற்பூரம் லவுங்கப்பட்டை ஜாதிக்கா வகைக்கி விராகனிடை (உ) இதற்கு சரியிடை வாளம் குமரிச்சார்விட்டுஅறைக்கவும உளுந்துப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவில் வைச்கவும் (அனுபானம்) சக்கறையில் (க) மாத்திரைகொடுக்க பேதியாய் சுரம்நிற்கும் இச்சாபத்தியம்.

---

## வாவலசஞ்சீவிக்குளிகை.

திரிகடுகு, லிங்கம்,வெண்காரம்,ஓமம், கிராம்பு சமயிடைபழச்சாற்றாலாட்டி உளுந்தளவுமாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவில்வைத்துக்கொள்ளவும் ஜன்னிசுரத்திற்குதுளசி-நாய்துளசி சாற்றிலிடவும் முலைப்பாலிலும் கொடுக்கலாம் தோஷசுரத்திற்கு வெத்திலையில் ஒருமாத்திறைவைத்து மென்று தின்னவும் பத்தியம் சுரத்திற்கு தக்கினபடிவைக்கவும்.

## குழந்தைகள் விடாதகழிச்சலுக்கு
## கட்டுவாதிமாத்திரை.

ஜாதிக்காய், ஜாபத்திரி, அதிவிடையம், அபினி, வகைக்கி விராகனிடை (உ) யாக நிருத்தெடுத்து நல்லெண்ணெயில்தோய்த்து (உ) ஜாமம் அரைத்து பணவிடை யுருண்டைசெய்து முலைப்பாலில் கொடுக்கவும் ஒருநாளைக்கி காலை மாலை உச்சி மூன்றுதடவையும்கொடுக்க பேதிநிற்கும்.

---

## மாந்தக்கழிச்சலுக்குமாத்திரை

ஜாதிலிங்கம் விராகனிடை (ச) திப்பிலி விராகனிடை (க) ஆவின்பால்விட்டு ஒருஜாமம் அரைத்து பயரளவு மாத்திரை செய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் (அநுபானம்) கரசனுங்கண்ணி, மிளகு, நாயுருவிவேர், பிரண்டைவேர், வசம்பு (ரு) தினுசும் சாம்பலாக்கி கருஞ்சிரகம் வெடிக்கவிட்டு கொஞ்சியிலையை சிவக்கவருத்து உழக்குஜெலம்விட்டுசுக்குதட்டிப்போட்டு ஆழாக்குகியாழுமாகக் காச்சியிரக்கி ஒருபாலடைகியாழத்திற்கு ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்கவும் மாந்தகழிச்சல் தீரும் இச்சாபத்தியம்.

---

## சுரஹரமாத்திரை.

| | |
|---|---|
| கோரோசனம் | கோரைக்கிழங்கு |
| பச்சைகற்பூரம் | சித்திரைமூலம் |
| அதிமதுரம் | நன்னாரிவேர் |
| ஏலம் | அகிற்கட்டை |
| லவுங்கம் | தேவதாரம் |
| செண்பகப்பூ | தாளிசப்பத்திரி |
| கோஷ்டம் | கிச்சிலிக்கிழங்கு |
| விலாமிச்சு | கடுக்காய் |
| கருடப்பச்சை | நெல்லிக்காய் |
| கல்நார் | தான்றிக்காய் |

இந்த (உ௰) தினுசுகளும் வகைக்கி விராகனிடை (க) நிருத்தெடுத்து இடித்து வஸ்திரகாயம்செய்து கல்வத்திலிட்டு செ

வ்விளநீர்விட்டு (ச) ஜாமம் அறைத்து மிளகுபிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும், (அனுபானம்) சீரகக்கியாழத்தில் காலை ஒருமாத்திரை மாலை ஒருமாத்திரையாக இருவேளையும் (ங) நாள்கொள்ள பித்தசுரந்தீரும் இப்படியே தேனில் (ங) நாள்கொள்ளவாதசுரந்தீரும் இஞ்சிசுரசத்தில் கொள்ள சேத்துமசுரம் தீரும் ✱ பஞ்சதீபாக்கினி சூரணத்தில் கொள்ள தொந்தசுரங்கள் தீரும் இச்சாபத்தியம்.

✱ பஞ்சதீபாக்கினிசூரணம் பின்வரும் சூரணவகைபரணியில் பார்த்துக்கொள்ளவும்.

---

## சுரகேசரிக்குளிகை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செஞ்சந்தனம் | விராகனிடை | -ங | நன்னாரி | விராகனிடை | - க |
| கோரோசனம் | ,, | உ | தாளிசப்பத்திரி | ,, | க |
| ஏலரிசி | ,, | க | தேவதாரம் | ,, | க |
| லவுங்கம் | ,, | க | மாசிக்காய் | ,, | க |
| அதிமதுரம் | ,, | க | ருத்திராட்சம் | ,, | க |
| பேரீச்சு | ,, | க | முந்திரிக்கை | ,, | க |
| இலுட்பைப்பூ | ,, | க | ரோகணி | ,, | யங |

இவைகளில் இடிக்கவேண்டியதுகளை யிடித்து சிலையில்வடிக்கட்டி மெல்லியதுளாய் செய்து யாவும்கல்வத்திலிட்டு பன்னீரினல் (க) ஜாமம் அறைத்து குங்குமப்பூ (க) விராகனிடை சேர்த்து இளநீர்விட்டு (உ) ஜாமம் அறைத்து குண்டுமணிபிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) இஞ்சிசுரசம் கருந்துளசிகியாழம் தேன் இதுகளில் காலை-க, மாலை - க, இருவேளையும் கொடுக்க தாபசுரம், உஷ்ணசுரம், அதிசாரசுரம், வரட்சிசுரம், பழைய காச்சல் தீரும், அதாவது முறைக்காச்சலும்தீரும் முலைப்பாலில் இருவேளையும் (உ) மாத்திரைகொடுக்க தோஷசுரம்தீரும் நீராகாரத்தில்கொடுக்க உஷ்ணகாந்தல்சுரம் தீரும் பரிங்கிசெக்கைகியாழத்தில் கொடுக்க கணசுரம்தீரும் பத்தியம்புளியாகாது அறைஉப்பு கூட்டவும்.

## ஊழிமணி.

| | | |
|---|---|---|
| பளிங்கு சாம்பிராணி | விராகநிடை - | ௯ |
| பெருங்காயம் | ,, | ௮ |
| வெள்ளெருக்கன்நரம்பு | ,, | ௩௰ |
| மிளகு | ,, | ௩௰ |
| கரியுப்பு | ,, | ௩௰ |
| விரைகாம்புபோக்கியகஞ்சா | ,, | ௨௰ |
| பூரம் | ,, | ௧ |
| லிங்கம் | , | ௧ |

இவை கல்வத்திலிட்டு எட்டிக்கியாழத்தினல் (௨) ஜாமம்அறைத்து முழுக்கடலை பிரமாணம் மாத்திரை செய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) வென்னீரில் அல்லது சாராயத்தில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்கவும் ஒருஜாமத்திற்கு ஒருமாத்திரையாக கொடுத்துவரவும் இடையில் ஆகாரம்வேண்டில் பச்சரிசிகஞ்சி மிதமாய்கொடுக்கவும்.

## இராஜபூபதிமாத்திரை.

| | |
|---|---|
| உலாந்தலிங்கம் | மனேசிலை |
| நெல்லிகெந்தகம் | சுக்கு |
| வெண்காரம் | திப்பிலி |
| வாலைரசம் | மிளகு |
| நாபி | ஏலரிசி |

வகைக்கு விராகநிடை (௧) வீதமாய் இஞ்சிச்சாற்றில் (௨) ஜாமம் அறைத்து மிளகளவு மாத்திரைசெய்து வைக்கவும் (அனுபானம்) முலைப்பால் தேன் திருகடுகுசூரணம் இஞ்சிசுரசம் இதுகளில் ஒருமாத்திறைகொடுக்க சகலசுரமும் தோஷமும் தீரும் கடும்பத்தியமிருக்கவும்.

## இராஜசவுக்கியமாத்திரை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜாதிக்காய் விராகநி | - | ௧ | வால்மிளகு விராகநிடை | - | ௧ |
| ஜாபத்திரி | ,, | ௧ | கிராம்பு | ,, | ௩ |
| கிச்சிலிக்கிழங்கு | ,, | ௧ | குங்குமப்பூ | ,, | ௰ |
| ஏலம் | ,, | ௧ | பச்சைகற்பூரம் | ,, | ௰ |
| கோஷ்டம் | ,, | ௧ | கஸ்தூரி | ,, | ௰ |
| சந்தணம் | ,, | ௧ | | | |

இவைகளை யிளநீர்விட்டு (க) ஜாமம்அரைத்து குண்டுமணி பிரமாணம் மாத்திரைசெய்து நித்தியம் இருவேளையும் வெத்திலையில் (க) மாத்திரைவைத்து தின்றுவரவும் சன்னி சீதளம் அணுகவொட்டாது கண்டத்திற்கு மேற்பட்ட வியாதிகள் யாதொன்றும் வராது கண்கள்பிரகாசம்கொடுக்கும் சகலவாய்வும் கண்டிக்கும் பத்தியம்கிடையாது போஜனம் செய்தபிறகு இம் மாத்திரையை சாப்பிடவேண்டியது.

---

## பிள்ளைகட்குசாதிலிங்கமாத்திரை.

லிங்கம் (அரைபலம்) முலைப்பால்விட்டு மூணுஜாமம் அரைத்து சிறுபயறுபிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி சீசாவி லடக்கம்செய்யவும் (அனுபானம்) ஒரு மாத்திரையை முலைப்பாலில் யிழைத்து கொடுக்க சன்னி சீதளசுரம் தீரும்.

ஆடாதோடைசாற்றிலிட மந்தசுரம் தீரும்
நொச்சிச்சாற்றிலிட வாதசுரம் தீரும்
சேத்தும சுரத்திற்கு குப்பைமேனி சிறுநீரிலிடவும்
வலம் ஜெலம் அண்டத்தால் கடுக்காய் கியாழத்திலிடவும்
பத்தியம் உப்பு புளிகூடாது.

---

## பாலசஞ்சீவிமாத்திரை.

| | | |
|---|---|---|
| இரசம் | விராகனிடை | க |
| கெந்தி | ,, | க |
| வாளம் | ,, | க |
| அரிசித்திப்பிலி | ,, | க |

சுத்த ஜெலம் விட்டு (க) ஜாமம் அரைத்து சிறுபயறுபிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி சீசாவிலடக்கம்செய்யவும் (அனுபானம்) முலைப்பால் நொச்சி துளசி இஞ்சிசுரசம் இதுகளிலெதிலேனும் ஒருமாத்திரை யிட உப்புமாந்தம்முதலாக எண்வகைமாந்தம் தீரும் சுட்டபுளியும் வருத்தவுப்பும் கூட்டவேணும்.

## இதுவும்பிள்ளைகட்கு

## சுராங்கிஷ பச்சைகற்பூரமாத்திரை

| | | |
|---|---|---|
| பச்சைகற்பூரம் | விராகனிடை | - உ |
| லவுங்கப்பட்டை | ,, | உ |
| ஜாதிக்காய் | ,, | உ |
| வாளம் | ,, | சூ |

கற்ருழையினுள்ளிருக்கும் சோற்றை (எ) திரம் அலம்பி விட்டு பிரகு சீலையில்முடிந்துப் பிழிந்து அச்சாற்றினல் ஷ மருந்தை (க) ஜாமம்அறைத்து உளுந்தளவு மாத்திரைசெய்து சோவிலடக்கவும் திருகடி சக்கரையில் (க) மாத்திரை பொடித்துவைத்து குழந்தைகட்கு கொடுக்க (௬௰) நாழிகையில் நாலேந்துவிசை பேதியாய் சுரம்விட்டுவிடும் இச்சாபத்திய மிருக்கவும்.

---

## நவமூலக்குளிகை.

| | | |
|---|---|---|
| பூரம் | விராகனிடை | - க |
| தாளகம் | ,, | க |
| மனேசிலே | ,, | க |
| பொரிகாரம் | ,, | க |
| கல்நார் | ,, | க |

இவைகளை கிரமப்படி சுத்திசெய்து கல்வத்திலிட்டு கொடிக்கள்ளிப்பால்விட்டு (உ) ஜாமம் அறைக்கவும் அப்படிஅறைக்கையில் முதலாவது தாளகத்தை நெகிழவறைத்து அதன்மேல்கல்னர்போட்டரைத்து அதன்மேல் மனேசிலே பொரிகாரம் பூரம்போட்டு க- ஜாமம் குறையாமலறைத்து குகையில்வைத்து மேலோடுமூடி சீலேமண் ஒன்றுசெய்து குக்கிடபுடம்போட்டெடுத்து திரும்பவும் கல்வத்திலிட்டு ஆவின்பால் துளிதுளியாய்விட்டு (க) ஜாமம் அறைத்து பழச்சாற்றி லொருஜாமம் அறைத்து குமரிச்சாற்றி லொருஜாமமாட்டி கையான்சாற்றி லொருஜாமமாட்டி துராயிலேசாற்றி லொருஜாமமாட்டி தூதள

ங்காயளவு மாத்திரைசெய்யவும் காலையில் ஒருமாத்திரையாக நாற்பதுநாள் கொள்ள நவமூலமும்தீரும் இந்த மாத்திரையை (௫) வயதுபிள்ளைகள்முதல் (௱) வயதுமட்டிலும் சாப்பிடலாம் வியாதியை தடையின்றி கேழ்க்கும் இச்சாபத்தியம்.

---

### இதுவும் பிள்ளைகட்கு

## அற்புதகற்பூரமாத்திரை.

| | | |
|---|---|---|
| பச்சைகற்பூரம் | விராகனிடை | உ௰ |
| கெந்தி | ,, | க |
| இந்துப்பு | ,, | க |
| லவுங்கம் | ,, | க௰ |
| ஜாதிக்காய் | ,, | க |
| ஜாபத்திரி | ,, | க |

இவைகளை எலுமிச்சம்பழச் சார்விட்டு (க) ஜாமம் அறைத்து உளுந்தளவு குளிகைசெய்து சீசாவில்வைக்கவும் இஞ்சியைஅறைத்து கெச்சக்காயளவு உருண்டையில் (க) மாத்திரை வைத்துக்கொடுக்கவும் அல்லது சக்கரையில் (க) மாத்திரை கொடுக்கவும் எந்தசுரமும்தீரும் இச்சாபத்தியம்.

---

## மாந்தக்குளிகை.

| | | |
|---|---|---|
| பூரம் | பலம் | - ௨ |
| லவுங்கம் | ,, | வ |
| ஏலம் | ,, | வ |
| வசம்பு | ,, | வ |
| சீரகம் | ,, | வ |
| மாசிக்காய் | ,, | வ |
| அதிவிடையம் | ,, | வ |

பூரத்துக்கிசைந்த சுத்திசெய்து மற்றதையிடித்து வஸ்திரகாயம்செய்து யாவும் ஒன்றுபட கல்வத்திலிட்டு விஷ்ணுகாந்திசார்விட்டரைத்து கொத்தமல்லிபிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி சீசாவில்வைக்கவும்(அனுபானம்) வேளைவேர்

சுக்கு வசம்பு வெந்தயம் பாலை ஓமம் இதுகள் சமன்கொண்டிடித்து கியாழமிட்டு ஒருபாலடை கியாழத்தில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்க சகலமாந்தமும் தோஷமும்தீரும் இச்சா பத்தியம்.

---

மகாவாத

## மூசாம்பரக்குளிகை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மஞ்சள்நிரமுள்ள மூசாம்பரம் | ரூபாயி | ௮ | மிளகு | ரூபாயிடை - | வ |
| | | | லவுங்கம் | ,, | வ |
| ஜடாமாஞ்சி | ,, | வ | பெருலவுங்கப்பட்டை | | வ |
| அசாருன் | ,, | வ | கஸ்தூரி | விராகநிடை - | வ |
| ரூமஸ்தகி | ,, | வ | தேன | பலம் | ௬ |
| குங்குமப்பூ | ,, | வ | | | |

முதலாவது தேனை அடுப்பேற்றி காச்சி அழுக்கு நீங்கச் செய்து ஷை மருந்துகளை தனித்தனி யிடித்து வஸ்திரகாயம் செய்து தேனிலிட்டியிரக்க யாவும் ஒன்றுபட ஊக்கமாகரேகித்து குன்றியளவு உருண்டைசெய்து பத்திரப்படுத்தவும ௩-௪ குன்றி உள்ளுக்கு கொடுத்துவர வலி, காக்கைவலி, வாய்கோணல், பின்னிழுப்பு பாரிசவாய்வு முருக்கல் சூதகவாய்வு, சீதளம், ஜன்னி, இவைதீரும், வாதம் சன்னிகளுக்கிசைந்த பத்தியம்வைக்கவும்.

---

## கபாடமாத்திரை

ஜாதிக்காய், ஜாபத்திரி, காயம், சீரகம், அதிவிடையம், கிராம்பு. அபினி, கெஞ்சா, களச்சிவித்து, வெந்தியம், குராசாணி, ஓமம், இவ்வ வகைக்கி (௨௭) விராகநிடையெடுத்து கெஞ்சாவின் சாற்றுலாட்டி இலந்தம்விரை பிரமாணம் மாத்திரைசெய்து எருமைத்தயிரில் (௧)மாத்திரையாக இருவேளையும் கொடுக்க (௨) நாள் (௩) நாள் கொடுக்கவும் வாழைப்பூசாத்திலும் கொடுக்கலாம் ஜெலக்கிராணி, வாய்வுகிராணி, மூலக்கிராணி, அதிசாரம் இதுகள்தீரும் காரம்நீக்கி சாதம்கொடுக்கவும் புளிகூட்டலாம்.

## வெள்ளைமாத்திரை.

| | | |
|---|---|---|
| ரசகற்பூரம் | விராகனிடை - | ரு |
| ரசச்செந்தூரம் | ,, | ரு |
| கெந்தகம் | ,, | க |

இம்மூன்றும் கல்வத்திலிட்டு சங்கங்குப்பி சாற்றினால் (க) ஜாமம் அரைத்து பணவிடைபிரமாணம் குளிகைசெய்து சுக்குத்தூள் ஒருசிட்டிக்கையில் ஒரு மாத்திரைவைத்து காலையில் கொடுக்கவும் (ரு) நாள்கொடுக்க தீராதவெள்ளை மேகம்பிடிப்பு தீரும் இச்சாபத்தியம்.

## மேகவாய்வுகளுக்குமாத்திரை.

கருநாபியை (ரு) நாள் பசுங்கோமியத்தில் ஊரவைத்தெடுத்து மேல்தோல்நீக்கி உலர்த்தி தூள்செய்து விராகனிடை (உ) யெடுத்துக்கொண்டு அத்துடன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கோரோசனை | விராகனிடை - | க | கெந்தகம் | ,, | ஹ |
| சூதம் | ,, | வ | தும்பராஷ்டகம் | ,, | ஹ |
| பூரம் | ,, | வ | அக்ராகாரம் | ,, | ஹ |
| ரசச்செந்தூரம் | ,, | வ | வெண்காரம் | ,, | வீசம் |
| வெள்ளைக்காக்கணும்வேர் | | வ | லவுங்கம் | ,, | வீசம் |
| லிங்கம் | ,, | வ | திப்பிலி | ,, | ஹ |
| ஈயசெந்தூரம் | ,, | ஹ | திப்பிலிமூலம் | ,, | ஹ |
| சுக்கு | ,, | ஹ | | | |

இவைகளை கருப்புவெத்திலை சார்விட்டரைத்து பயறுபிரமாணம் மாத்திரைசெய்து சீசாவில்வைத்துக் கொள்ளவும் வாய்வு, வாய்கிட்டல், இடுப்புவலி, இவைகட்கு வெத்திலைரசத்தில் (க) மாத்திரையாக இருவேளையும் தரலாம் திமிர், வீக்கம், இவைகளுக்கு இஞ்சிரசத்தில்விடவும் ஆள் தேகதிடப்படி (ங)

நாள் (சு) வேளைகொடுக்கவும் ஏழாவதுநாள் முத்தெண்ணை யுடன் மஞ்சள் ஓமம் வெத்திலைக்காம்பு அன்னநீரில் பழகிய காடிஜெலமும் கொஞ்சம்விட்டு காச்சி ஸ்நானம்செய்து வைக் கவும்.

## மாத்திரைவகைபரணி

முற்றிற்று.

இன்னும் அனேகமாயுள்ள மாத்திரைவகைகளை யும் பாஷாணம் முதலாயுள்ள சரக்குவகைசுத்திகளை யும் முதற்பாகத்தில் அச்சிட்டு விற்பனைசெய்துவரு வதால் இந்தஇரண்டாம் பாகத்தின் அவுழ்தங்களி ன் சரக்குசுத்திகள்யாவும் முதற்பாகத்தில்விளங்கும் மூன்றும்பாகம் பிரயாணப்படும்.

உ

வேலுமயிலுந்துணை.

# இரண்டாவது

# குழம்புவகை பரணி.

## கௌசிகர்குழம்பு.

| | | |
|---|---|---|
| மனேசிலை | விருகநிடை | க |
| தாளகம் | ,, | க |
| நாபி | ,, | க |
| இந்துப்பு | ,, | க |
| வெண்காரம் | ,, | க |
| ரசம் | ,, | க |
| கடுக்காய் | ,, | க |
| காயம் | ,, | க |
| திப்பிலி | ,, | க |
| கடுகுருணி | ,, | க |
| சீரகம் | ,, | க |

இவைகளை ஷை விருகநிடையாக யெடுத்து இதற்குச் சரியிடை வாளம்சேர்த்து இவையாவும் கொண்டயிடைக்கு சரியிடை சேலத்துபழையபனவெல்லம் சேர்த்து தேங்காயோடு சுட்டக்கரி - விருகநிடை - ௨ - பொரித்தவெண்காரம் - விருகநிடை - ௨ . இவை யாவும்கல்வத்திலிட்டு பழச்சார்விட்டு ச - ஜாமம் அறைத்து தேங்காய்ப்பால்விட்டு க - ஜாமம்அறைத்து மாட்டுக்கொம்பு டப்பியில் வைத்துக்கொள்ளவும் பட்டாணிபிரமாணம் யெடுத்து பனவெல்லம் - வாழைப்பழம் சக்கரையிதுகளில் கொடுக்கவும் பேதியாம் வாதபித்தசிலேத்தும தொந்தரைகள் யாவும் நீங்கும் பேதியதிகமானல் மோர்சாதம் சாப்பிடவும் மாலையில்மிளகுகியாழம் சாப்பிடவும் தலைவலி நீரேற்றம் - கழுத்துவலி - ஜன்னி இதுகட்கு தகுந்த அனுபானங்களில் கையாடவும்.

## அகஸ்தியர்

# லிங்கக்குழம்பு.

| | | |
|---|---|---|
| லிங்கம் | விராகனிடை - | ச |
| பூரம் | ,, | உ |
| வெண்காரம் | ,, | கூ |
| வாளம் | ,, | கஉ |
| சித்தாமணக்குபருப்பு | ,, | ச |

இவைகளை கிரமப்படி சுத்திசெய்தபின் நிருத்தெடுத்து கல்வத்திலிட்டு (ச) ஜாமம் அரைக்க மெழுகாகும் அதையெடுத்து மாட்டுக்கொம்பு சிமிளில் வைத்துக்கொள்ளவும்.

வயற்றுவலிக்கு. பிரண்டையை கொண்டுவந்திடித்து ஒருபிடியெடுத்து (அரிக்கால்)படி ஜெலத்திலிட்டு சிவக்கக்காய்ச்சி யிரக்கிவடித்தகியாழத்தில் ஒருபணவிடை குழம்புகூட்டி உள்ளுக்கு கொடுக்க காலை ஓரேவேளையாக ங - நாள் கொடுக்க நீங்கும் இச்சாபத்தியம்.

---

அண்டவாதம் சூலைக்கு. கற்கடகம் - சிங்கி - கழற்சிக்கொடிக்காய் - வெள்ளுள்ளி சுக்கு - முருங்கைத்துளிர் சக்கரை இவை சமனிடையெடுத்தரைத்து கெச்சக்காய் பிரமாணமுருட்டி அதிநடுவில் ஷை குழம்பு பணவிடைவைத்துக் கொடுக்கவும் நீங்கும் புளி சுட்டபுளி வருத்தவுப்புகூட்டவும்.

---

சூலைமுடக்குக்கு. சித்திரைமூலவேரின்பட்டை ஒருபிடியெடுத்து பஞ்சுபோல் நருக்கிகியாழமிட்டு காலை ஒருவேளையாக பணவிடை குழம்புசேர்த்துக் கொடுக்கவும் தீரும் கடும்பத்தியம் - ங - ரு - எ - நாள் வியாதியின்திடமரிந்து யீயவும்.

---

வாதசுரத்திற்கு கொச்சியிலைசார் ஒருகரண்டியளவுக்கு பணவிடை குழம்பு மத்தித்துக் கொடுக்கவும் இச்சா பத்தியம்.

| | |
|---|---|
| கிரந்திநோய் | நத்தைச்சூரி - கொடிவேலி குப்பைமேனிஇது |
| (௰-க்கும்.) | களின் சாறுசமயிடை ஒன்றாய்கலந்து அதற் |
| ,, | கு சரியிடை முத்தெண்ணை சேர்த்து மெழுகு |
| ,, | பதமாய் காச்சி இரக்கி காலைஒருவேளையாக உ |
| ,, | ச்சிக்கரண்டியெண்ணெயில் பணவிடைகுழம்பு |
| ,, | மத்தித்து கொடுக்கவும் இப்படி (௩) அல்லது |
| ,, | (௫) நாள்சாப்பிடவும் கடும்பத்தியமிருந்தாலே |
| ,, | நலமாம் இவை வொவ்வொன்றிற்கும் மருந்து |
| ,, | கொண்ட அளவுபோல்மருபத்தியங்கார்க்கவும். |

---

| | |
|---|---|
| சுரத்திற்கு. | ஏலம் அதிமதுரம் கொத்தமல்லி அரத்தை |
| ,, | கோஷ்டம் சமயிடையெடுத்திடித்து கியாழம் |
| ,, | வைத்திருத்து அந்தகியாழத்தில் பணவிடை |
| ,, | குழம்பு யிழைத்துகொடுக்கவும்தீரும் இச்சா |
| ,, | பத்தியம் கடும்சுரமாகில் தகுந்தபத்தியம் ப |
| ,, | தார்த்தம் சேர்க்கவும் ௩ - நாள்கொடுக்கவும் |

---

| | |
|---|---|
| வலிகுன்மத்திற்கு— | நிலவாகை ஒருபிடி கால்படி ஜெலத்திலிட் |
| ,, | டு (வீசம்படியாக) சுருங்கக்காச்சிபணவிடை |
| ,, | குழம்பு மத்தித்துக் கொடுக்கவும் ௨ - நாள் |
| ,, | இச்சாபத்தியம். |

---

| | |
|---|---|
| திமிர்வாதப் | உத்தாமணியின்சாத்தில் பணவிடை குழம்பு |
| பிடிப்புக்கு. | சேர்த்துக்கொடுக்கவும் - ௩ - ௫-நாள் கொடு |
| ,, | க்கவும் கடும்பத்தியமிருக்கவும். |

---

| | |
|---|---|
| காமாலைக்கு. | செங்கடுக்காய் பூவரசம்பட்டை சமயிடைதூ |
| ,, | க்கியிடித்து கியாழமிட்டு பணவிடை குழம்பு |
| ,, | சேர்த்துக் கொடுக்கவும் கடும்பத்தியம் ௩-௫ |
| ,, | ௭-நாள்கொடுக்கவும். |

---

கடிவிஷங்களுக்கு. சிறுசின்னியிலைசார் துட்டிடையெடுத்து அ
,, தில் பணவிடை குழம்புகலந்து கொடுக்கவும்
,, படர்தாமரையும் தீரும் சுட்டபுளி வருத்தஉ
,, ப்பு கூட்டவும் - ௩ நாள்.

---

பிள்ளையுண்டாக.—பெண்கள் இரகசியஸ்தானம் செய்கிறமூன்
,, றுநாளும் விஷ்ணுகாந்திச்சார் துட்டிடையெ
,, டுத்து அதில் (௨) பணவிடை யிழைத்துக்
,, கொடுக்கவும் கருக்குழியின் சதையடைப்பு
,, கிருமிமுதலிய அறுவகைக்குற்றமும்நீங்கிகரு
,, தரிக்கும்.

---

பேதிக்கு. பனைவெல்லம் கழற்சிக்காயளவு அதினடிவி
,, ல் பணவிடைகுழம்புவைத்து மூடிகொடுக்க
,, வும் குளிர்ந்த ஜெலம் குடித்தால் பேதியதிக
,, மாகும் வென்னீர்குடித்தால் பேதிகட்டும் அ
,, ப்படியும்மிஞ்சினால் ஆவின்மோர்கூட்டிபோ
,, ஜனம்செய்யக் கட்டும் அப்படியும்அதிகமானா
,, ல் வசம்புசுட்டுகியாழமிட்டு சாப்பிடபேதினி
,, ன்றுவிடும் மாலையில் மிளகுகியாழம்.

---

எலிகடிக்கு. யெருக்கிலையை அறைத்து கழற்சிக்காய் பிர
,, மாணமெடுத்து பணவிடைகுழம்பு வைத்து
,, ருட்டி கொடுக்க (௰அ) எலிவிஷமும்நீங்கும்
,, கடும்பத்தியம் மருபத்தியம் சுட்டபுளிவருத்த
,, உப்பு.

---

அலர்ஜன்னி அலர்ஜன்னி ஆனந்தஜன்னி முதலான துஷ்
,, டவிஷங்கட்கு வேப்பெண்ணையில் குன்றிப்
,, பிரமாணம் யிழைத்து கலிக்கமிடவும்.

---

## அகஸ்தியர்

# பெருங்குழம்பு.

| | |
|---|---|
| பெருங்காயம் | கருஞ்சீரகம் |
| கடுகு | ஓமம் |
| திப்பிலி | கடுக்காய் |
| கோஷ்டம் | கடுகுருணி |
| சுக்கு | கார்போகரிசி |
| மிளகு | நெல்லி |
| தாணிக்காய் | திராட்சி |
| அக்கிராகாரம் | ஏலம் |

இவை தினுசுகள் (கசூ) ம் வகைக்கி (க) விருகநிடையாக நிருத்தெடுத்து இளம்வருப்பாய் வருத்து சூரணித்து வைத்துக் கொண்டு,

| | |
|---|---|
| பெருநாவி | மனோசிலை |
| நிருவிஷம் | நெல்லிக்காகெந்தி |
| லிங்கம் | இந்துப்பு |
| தகட்டரிதாரம் | வெண்காரம் |
| இரசம் | |

இவைகள் தினுசு (கூ-ம்)வகைக்கி (க)விராகநிடையெடுத்து பச்சையாகவே முன்சூரணத்துடன் சேர்த்துநிருத்து அவ்விடைக்கு சரியிடை சுத்திசெய்த வாளம் சேர்த்துக்கொள்ளவும் தேங்காய்ஓட்டை சுட்ட கரி விராகநிடை (அ) பனைவெல்லம் விராகநிடை (அ) இவையாவும் கல்வத்திலிட்டு தேங்காய்ப்பால்விட்டு (க) நாள் முழுமையும் அறைக்கவும் உத்தாமணிசார்விட்டு ஒருநாள்முழுமையும் அறைக்கவும் மெழுகுப்பதத்தில் வழித்து மாட்டுக்கொம்பு சிமிழில் வைத்துக்கொள்ள வேண்டியது இதை அறைக்கும்போது விளக்கெண்ணை, நெய், பசும்வெண்ணை மூன்றும் குழைத்து முகத்திற்கு பூசிக்கொண்டு கேழ்வரகுமாவின் கூழும் மோரும்கரைத்து திருப்தியாக சாப்பிட்டு அறைக்கவும்.

(இதற்கனுபானம்)

சுரத்திற்கு. கடுக்காய்சாற்றில் அல்லது கடுக்காய் கியாழத்தில் ஒருகாசுயிடை ஷி குழம்பு யிழைத்துக்கொடுக்கத் தீரும்,

| | |
|---|---|
| குளிர்சுரத்திற்கு | சுக்குநீரில் ஒருகாசுயிடை குழம்பை யிழை |
| ,, | த்துக்கொடுக்கவும். |
| ரெத்தமூலத் | வெள்ளாட்டுப்பாலில் ஒருகாசுயிடை குழம் |
| திற்கு. | புகலந்துக் கொடுக்கவும். |
| நீரொழுக்கிற்கு. | பாண்டு மகோதரம் நீராம்பல்பெருவயர் இ |
| ,, | துகட்கு மிளகுதூள் அல்லது வெங்காயத் |
| ,, | தில் ஒருகாசுயிடை குழம்புவைத்துக் கொடு |
| ,, | க்கவும். |
| ஜன்னிகளுக்கு. | இஞ்சி தேன் முலைப்பாலில் வென்னீரில் இ |
| ,, | வையெதிலேனும் ஒருகாசுயிடை குழம்புமத் |
| ,, | தித்துக் கொடுக்கவும் தீரும். |
| பெரும்பிளவை. | துடைவாழை அறையாப்பு புண்ணு பெரு |
| ,, | ஞ்சிலந்தி இவைகட்கு உமிநீரில் ஒரு காசுயி |
| ,, | டை யிழைத்துக் கொடுக்கவும் அன்னீராலி |
| ,, | ழைத்தே சிலந்திமுதலிய ரிணத்தின்மீதும் |
| ,, | தடவலாம். |
| முலைக்குத்துக்கு. | நொச்சிச்சாற்றில் ஒருகாசுயிடை யிழைத்து |
| ,, | க்கொடுக்கவும் அந்தசாத்தினாலிழைத்தேமே |
| ,, | லுக்கும்பூசவும். |

வாதசூலை இளக்குட்டத்திற்கு—நொச்சியிலை வதக்கிப் பி
,, ழிந்த சாற்றில் காசுயிடைகொடுக்கவும்.

---

| | |
|---|---|
| வாய்வுகளுக்கு. | இஞ்சி அல்லது கொஞ்சிப்பட்டை கியாழத் |
| ,, | தில் ஒருகாசுயிடை கொடுக்கவும். |

ஜன்னி(யிரு)க்கும்—வெங்காயச்சார் முசுமுசுக்கைச்சார் நொச்
,, சிச்சார் இதுகளில் கொடுக்கவும்.

| | |
|---|---|
| தலைபாரம். | கழுத்திழுப்பு இதுகட்குயெருக்கிலை அல்லது |
| ,, | வேப்பஞ்சார் வேப்பம்யெண்ணையில் யிழை |
| ,, | த்து கண்ணில் கலிக்கம்போடவும். |

---

| | |
|---|---|
| சந்தானமில்லாத | அரசன்கொழுந்து ஆவின்பால்விட் டரைத் |
| வர்க்கு | து செச்சக்காய்பிரமாண மெடுத்து அதில்கா |
| ,, | சுயிடைவைத்துக் கொடுக்கவும். |

---

| | |
|---|---|
| உதிரவாய்வுக்கு. | கருத்த ஆட்டின்பாலில் வில்வப்பட்டையை |
| ,, | நருக்கிப்போட்டுக் காச்சி காசுயிடை மருந்து |
| ,, | கலந்து கொடுக்கவும். |

---

| | |
|---|---|
| உப்பிசத்திற்கு. | கொண்ணைக்கொழுந்து கடுக்காயெண்ணைமு |
| ,, | லைப்பால் இதுகளில் காசுயிடைகொடுக்கவும். |

---

| | |
|---|---|
| இருமலுக்கு. | இஞ்சி கொஞ்சிப்பட்டை யிதுகளில் காசுயி |
| ,, | டைகொடுக்கவும். |

---

| | |
|---|---|
| ஐயாயிரம்விஷக் | கருப்புவெத்திலைச்சார் வேப்பெண்ணை வெ |
| கடிகளுக்கும். | ன்னீர் இதுகளில் பயரளவுவைத்துக் கொடு |
| ,, | க்கவும் அன்றியும் கடிவாயிலும் தடவவும் |
| ,, | மற்றுமுள்ள அனுபானங்களறிந்து கொடுக்க |
| ,, | வும் இதற்கு பத்தியம் வியாதிகளின் குணம |
| ,, | றிந்து அந்தந்த வியாதிக்குதக்க பதார்த்தம் |
| ,, | பத்தியம்வைக்கவும். |

## அகஸ்தியர் மஹாகுழம்பு.

### விருத்தம்.

பருவதம் தன்னில்வாழும் பரமனாருளினாலே
பெருமையா யுலகில்வாழும் புண்ணிய ஜெனங்களுக்கு
உருபல வியாதிவந்தால் உண்மையாய் தீரவென்று
பிரபல முனிவர்தானும் பேசிய மருந்துகேளே. 1

பேசிய மருந்துகேளாய் பெருங்காயம் கடுகிந்துப்பு
விசியரசம் பொற்காரம் விஷமனே சிலையுங்கூட்டி
ஆசிலாத்திப்பிலியும் அதட்டிய தாரந்தோடு
மாசிலாக்கருஞ்சீ ரகம் வகைக்கழஞ்சு வாங்கே. 2

வாங்கிய மருந்துக்கொக்க வாளமும் வருத்துப்பாதி
தாங்கியபச்சைபாதி சமன்முளைத்தோடு போக்கி
தீங்கிலாமருந்து பத்தும் சேரவே யரைக்கக்காந்தும்
ஓங்கிய மோரும் சாதம் உண்டு பின்னரைத்துக்கூட்டே. 3

கூட்டிய மருந்தின்பேரு அகஸ்தியர் குழம்பதாகும்
யீட்டிய சுரமேசுக்காம் இரும்பலே கடுக்காய்சாறு
வாட்டிய குளிர்சுரங்கள் வகைசுக்குமிளகுதுளாம்
பாட்டிய ரெத்தமூலம் நெய்யினில் மேதைபாலே. 4

பாலினி லொழியும்பாண்டு மகோதாம் பெருவயறு
மேலும் நீராமைகூகை மிளகுதூள் வெள்வெங்காயம்
சாலவே சன்னிக்கெல்லாம் தேனிஞ்சி சாற்றிலாகும்
ஏலவேசுக ஜன்னிக்கு வேப்பெண்ணெயிருலிடுகண்ணுக்கே. 5

இடுகண்ணில் கடுகிற்பாதி யிருந்து கற்றுழஞ்சோறு
வடிதயிர் சந்தணங்கள் வைத்துநீ கட்டமாறும்
படுபரு பிளவைவாழை பற்கறையாப்பு புண்கள்
வடுபெருஞ் சிலந்தியாகில் உமிழ்நீரில்குழைத்துப்பூசே. 6

பூசிடு முலைக்குத்துக்கும் புண்ணுக்கு மிதுவேயாகும்
சூசிகவலிகுன்மங்கள் தோன்றிடில் நொச்சிச்சாற்றில்
காசங்கள் திரிகடுகு தேனிலின் கலந்துதின்ன
நாசமாம்வாதசூலை நருசுக்கு நொச்சிபாறே. 7

பாராய் கபாலவலிமுதலாய் பசாசுபரக்கும் திரிபுகையால்
நேரியெடுக்கும் நீர்சொரிப்பு நீர்சலஅடைப்பு தாழைவிழுதில்
தீரும்தீராக் கபாலகிரந்தி தீருங்குப்பிச் சாற்றிலிட
நீராய்கொடுக்க பலவிஷமும் தீருந்தீரும் திரிபிடியே. 8

பிடிக்குந்திரிக்கு முன்னணைக்கில் பிரட்டிசிலையையுலரவைத்து
யிடிக்கும்வலிக்கும் தனுர்வாதம் யிளைத்தேசாடும் புகைகாட்ட
குடிக்கும்கியாழும் கழற்சியிலை கொடியநொச்சி மாவிலிங்கம்
யிடிக்கும்ஜன்னி பதினெட்டும் அனுபானஞ்செய் நூல்விதியே.

விதியால்வந்த மருந்தெல்லாம் வேறேதேட வேண்டாங்காண்
பதியாம்வியாதி நாலாயிரம் பகருநாற்சதநாற்பத்தெட்டும்
துதிடாயிணங்கும் குரிப்பரிந்து தூயவகை யனுபானஞ்செயில்
துடியாய்திரு மெனவென்று சொன்னார் முனிவர் துகையாக.

சொன்னார்மடவார் தங்கட்கு சுதனும்கெற்பம் வரும்படிகேள்
முன்னே அரசங்கொழுந்ததனை மிகவாவின்பால்விட்டரைத்து
முன்னார்குளம்பில்பணவிடைதான்மூட்டிமூன்றுநாட்கொடுக்க
பொன்னும்புதல்வருண்டாகும் புவியோர்க்குறுதிகண்டீரே. 11

கண்டீர்நாவில் பட்டைதனை கருத்த வாட்டுப்பால்தனிலே
கொண்டேசீரகம் பொடிகூட்டி குளம்பில் பணவிடைதானுண்
பண்டே சூதகத்தில்வரும் உயர்ந்தவாய்வு வுடன்தீரும் [டால்
வண்டார்குழல்சேர்மடமானேமலைசேர் முனிவன்வகுத்ததுவே

வகுத்தபிரமன்விதியாலே வருஞ்சூசிகமாம்வாயுவுடன்
திமகூதிமிருந்த வலிதீரும் தின்னேசொன்னார் விரகுடனே
பறுத்தநொச்சிச் சாறுதனில் பாங்காம்சாரணை மிளகுசுக்கு
தொகுத்தகுளம்பில் பணவிடைதான் சொன்னோம் கேட்டுக்கொள்வீரே

கொள்ளும்பிரவிச் சுதனுக்கு கொடுக்கமருந்து தனைக்கேளு
உள்ளிமுருங்கைப்பட்டையுடன்வுயர்ந்தபுங்கு யெருக்கிலைவேர்
விள்ளவரிதாம் திருகுகள்ளி விரைசேரிஞ்சி ரசமதிலே
கொள்ளும்குளம்பில் பணவிடைதான் சேர்த்துக்கொடுக்க வல்லீரே.

வல்லீர்நெஞ்சுவலிகளுக்கு வகையாம் மருந்துதான்கேளீர்
வெல்லும்லவுங்கப்பத்திரியும் விரைசேர்கிரும்பு அதிமதுரம்
சொல்லும்தாளிச்சப்பத்திரியும் சிரந்தஆவின் வெண்ணையுடன்
அல்லேகுளம்பில் பணவிடைதான் அருந்தத்தீருங்கண்டீரே.

அருந்தும்தாளி யிலையவரி ஆவின்வெண்ணை யதுவுடனே
பொருந்துங்குளம்பு ரெண்டுபணம் போலச்சேர்த்து கொடுப்பீரால்

பொருந்தவினையாம் விரியன்விஷம் பேயுந்தீரும் பெரியோர்காள்
வருந்தாதிதனை நீருண்ண வலிபோம்சொன்னோம் மறவீரே.

மறவீர்நாவல்கொழுந்துடனேவாய்த்தமிளகு விராகன்ரெண்டு
முறையாயருந்த வெள்ளிலையில் முன்னங்குளம்பு பணவிடைதான்
பறையாயிதெல்லா மொன்றாக பரிந்துகொடுக்க வல்லீரேல்
பிரவார்நாகங் கடிவிஷமும் பிணியுந்தீரும் பெரியோரே. 17

தீருந்தேளின் விஷந்தனக்கும் செய்யாண்குத்து துளசியிலையில்
சேருங்குளம்பு பணவிடைதான் திரமாய்சேர்த்து கொடுத்துவிடு
பேருங்கடிவாய் யுமிழ்நீரில் லூட்டிப்பூச விஷம்போங்காண்
மாருங்குயிலே மடமானே வாளைகடிக்கனு பானங்கேள். 18

கேளாய்வெல்லம் புகையூறல் கிளியேமிளகு பேய்பீர்க்கில்
நாளைசெய்யும் விறைமூன்று நன்றாய்குப்பை மேனியின்பால்
ஆளவார்த்து வதனுள்ளே அன்பாய்குளம்பு பணவிடையும்
வேளைகொடுக்க வல்லீராய் விடுமேவாளை விஷந்தானே. 19

தானேநஞ்சு வலிதனக்கு சாற்றுமருந்து தனைக்கேளாய்
மானேபழைய புளிவெல்லம் வகையாய்சித்திர மூலியுடன்
தேனேகுழம்பு மேனியின்பால் திரமாய்விட்டுசேர்த்தரைத்து
வானோர்குழம்பில் பணவிடைதான் வகையாய்கொடுக்க வலிபோமே. 20

வலியேசெய்யும் நீர்கட்டு மாறமருந்து நீகேளாய்
நலியாமிளகு வெண்காரம் நன்றாய்பொரித்து கற்கண்டுடனே
மெலியாய்ரெண்டு விராகன்பொடி மெய்யாவின்பால் செய்பதனில்
புலியான்குழம்பு பணவிடைதான் புகழ்ந்தேகொடுக்க பிணிபோமே. 21

பிணியாம் விஷபாகத்தேகடு பின்னும்வீக்கம் தான்தீர
துணியாம்நொச்சி சாறுடனே சொல்லுந்திரிகடு தான்கூட்டி
மணியாங்குழம்பு பணவிடைதான் வகையாய்சேர்த்துக் கொள்வீரே
கெணியாயெழுந்த வீக்கமெல்லாங் கெடுமேசொன்னோங் கேளாயே. 22

கேளாயித்த வகையெல்லாம் கிளியேபேதி மிகவுண்டாம்
பாராய்மயக்க வசம்புசுட்டு பாக்காய்கியாழம் வைத்ததனில்
சூடாய்வெண்ணை பாக்களவு சுருக்காய்போட்டு கொடுப்பீராய்
மீளாய்பேதி யுள்ளதெல்லாம் மின்னேதீரும் மெய்யிதுவே. 23

மெய்யாய்வசம்பு தானரைத்து மிதமாய்கலக்கி தண்ணீரில்
கையாலெடுத்து தானருந்த கறையாய்நிற்குந் தான்பேதி
வையாமோரும் பழச்சாறும் வகையாய்கூட்டி தான்கொடுக்க
பையாபேதி தான்றிரும் பதமாய்சேர்த்து கொடுப்பீரே. 24

கொடுக்கவசம்பு தான்முருங்கை கூருமயிலிரகு திராக்ஷித்தில்
நடுக்காயேந்தி கொடுப்பீராய் தானேநிற்கு மலக்கழிச்சல்
அடுக்காய்வாந்தி மிகக்கண்டால் அரனார்சிரக கியாழத்தில்
நடுக்காய்சக்கரை கூட்டியிட நலமாம்வாந்தி கண்டீரே. 25

ஷெ செய்புனுக்கு விபரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மனோசிலை | விராகனிடை- | க | பெருங்காயம் | விராகனிடை- | க |
| ரசம் | ,, | க | கடுகுரோகணி | ,, | க |
| தாளகம் | ,, | க | திப்பிலி | ,, | க |
| பொரிகாரம் | ,, | க | கருஞ்சீரகம் | ,, | க |
| நாவி | ,, | க | வாளம் | ,, | ௪ |

மேற்கண்ட மனோசிலைமுதலாய் நாபிவரையிலுமுள்ள ரு-வகைமருந்துகளையும் பச்சையாகவே கூட்டவேண்டும் அதாவது சுத்திசெய்யவேண்டுவதில்லை, மோரும் சாதமும் திருப்தியாகசாப்பிட்டு அரைக்கத்துடங்கவேண்டும், முதலாவது தாளகத்தை கல்வத்திலிட்டரைத்து அதன்மேல் மனோசிலையை போட்டரைத்து, பிறகு மற்றமூன்றுமிட்டரைக்கவும் பெருங்காயம் முதலாய் வாளம்மட்டிலுள்ள தினுசுகள் ௫-ல், நானகை இளம் வருப்பாகவறுத்து கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துக் கூட்டியரைக்கவும், வாளத்தை சாணிப்பாலில் கொதிப்பித்து மேலோடுதட்டி முளைநீக்கி விளக்கெண்ணெ ௰- துளிவிட்டுவதைக்கிசேர்த்து அரைக்க குழம்பாகும்மாட்டுக்கொம்புசிமிழில் வைத்துக்கொண்டு ஷெ அனுபானப்படி பிரயோகிக்கவும்,

---

## சண்டமாருதக்குழம்பு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காயம் | விராகனிடை | க | சாரம் | விராகனிடை | க |
| ஓமம் | ,, | க | சித்திரமூலம் | ,, | க |
| சுக்கு | ,, | க | பனைவெல்லம் | ,, | ௪ |
| பூநீர் | ,, | க | கஸ்தூரிமஞ்சள் | ,, | ௪ |
| காரம் | ,, | க | | | |

இவைகளை கல்வத்திலிட்டரைத்து சுண்டக்காய்விதம் உருண்டைசெய்து சீசாவில்வைத்துக்கொள்ளவும், (அநுபானம்) பந்தாய் அல்லது பிராந்தியில் ஒருமாத்திரை கரைத்துக்கொடுக்க வாந்திபேதி யிவைநிற்கும் ஒருசமயம் தாகம் மீறினாலும் மருந்து வாந்தியானாலும் பனிக்கட்டியென்னும் ஐயிஸ்கட்டியை பிராந்தியில்கரைத்துக்கொடுக்கவும் தீரும்,

## சுடுகாடுமீட்டான்குழம்பு.

| | |
|---|---|
| கெந்தி | துருசு |
| ரசம் | இந்துப்பு |
| லிங்கம் | மகிழம்விரை |
| தாரம் | சுக்கு |
| மனோசிலை | திப்பிலி |
| வெண்காரம் | மிளகு |
| நாபி | காயம் |

இவைகளை சமனிடைகொண்டு பொடித்து கல்வத்திலிட்டு அரைக்கவும் அரைக்கையில் பூவந்திப்பழத்தின் சதைகூட்டி அரைத்து செப்புசிமிழில் வைத்துக்கொள்ளவும் (அநுபானம்) விஷந்தீண்டி வந்தவர்களுக்கு குன்றியளவெடுத்து வெத்திலையில்தடவிகொடுக்க விரியன்முதலிய சர்வவிஷங்களும் தீரும் உடனே தவளையைபிளந்து கடிவாயில் வைத்துக்கட்டவும் விஷம் மலத்தால்கழியும் பச்சரிசியும் பயரும் கஞ்சிகாசிக் கொடுக்கவும் அல்லது முருங்கையீர்க்குசார் காசிக்கொடுக்கவும்.

## வீரக்குழம்பு.

| | | |
|---|---|---|
| வீரம் | விராகனிடை | க |
| பூரம் | ,, | க |
| லிங்கம் | ,, | க |
| வெண்காரம் | ,, | க |
| சாரம் | ,, | ரு |
| ஏலம் | ,, | அ |
| லவுங்கம் | ,, | அ |
| வாளம் | ,, | ய |

இவைகளை கல்வத்திலிட்டு வாளத்தை சுத்தித்தபிறகு விளக்கெண்ணையில் புரட்டி சற்றுவெதுப்பி யெடுத்து சேர்த்தரைக்கவும் வாதம் (அச) க்கும் விரோஜனத்திற்கும் சன்னிகளுக்கும் குன்றியிடை வெத்திலையில் அல்லது சக்கரையில்கொடுக்கவும் இச்சாபத்தியம்.

## கொழம்புவகைபாணி

முற்றிற்று.

---

இவ்வளவு வெள்ளியநடையாய் அச்சிட்டு பயிரங்கப்படுத்திய அனுபோகவயித்தியத்திற்கு சரக்குசுத்திகள்சொல்லவில்லையென கவலைப்படவேண்டாம்இதற்குமுதல்பாகம் வேறேயிருக்கின்றமையால் சகலவிஷயமும் அதிற்றெறிந்துக்கொள்ளலாம்.

இனி மூன்றும்பாகம் பிரயாணப்படும்.

உ

வேலுமயிலுந்துணை.

## மூன்றுவது

# செந்தூரவகைபரணி.

## காளமேகசெந்தூரம்.

| | | |
|---|---|---|
| இரசம் | விராகனிடை - | சு |
| தாளகம் | ,, | க |
| கெந்தி | ,, | க |
| லிங்கம் | ,, | க |

இவையைந்தும் கல்வத்திலிட்டு குமரிச்சார்விட்டு (க) ஜாமம், பழச்சார்விட்டு (ய) ஜாமம் அறைத்து பில்லைதட்டி காயவைத்து அகலில்வைத்து மேலோடுமூடி சீலைமண் (ங)செய்து (ரு) யெருவில் புடம்போட செந்தூரமாம் (அனுபானம்) நெய், தேன், வெண்ணை, இதுகளில் பணவிடைகொடுக்க தந்திமேகம் மதுமேகம் சுக்கிலமேகம் கண்டமாலை இதுகள்தீரும் வயற்றுநோவிற்கு சக்கரையில் கொடுக்கவும் இச்சாபத்தியம் புளிதள்ளவேண்டியது நோய்திடமறிந்து (ங) நாள் அல்லது (ரு) நாள் கொடுக்கவும்.

---

## அன்னபேதிசெந்தூரம்.

அன்னபேதி (க) பலம்வாங்கி பெரும்பட்டை சார்விட்டரைத்து பில்லைதட்டி காயவைத்து ஓட்டிலிட்டு ஓடுமூடி சீலைமண்செய்து (ச) எருவில் புடம்போட செந்தூரமாம் வாந்திக்கு தேனில் பணவிடைகொடுக்க நீங்கும் பத்தியம் பச்சரிசிக்கஞ்சிகொடுக்கவும்.

## இதுவுமது

## அன்னபேதிசெந்தூரம்.

அன்னபேதி (௨) பலம்வாங்கி சிறுநீராவது பழச்சாறாவது விட்டு பிட்டுபோல்கிளறி அகலில்வைத்து மேலோடுமூடி சீலைமண்செய்து (௰) வெருவில் புடம்போட செந்தூரமாம் அநுபானம்) தேன் நெய் பசும்பால் இவைகளில் பணவிடைகொடுக்க பாண்டு காமாலை மகோதரம் பெருவயிறு வீக்கம் இதுகள் தீரும் இருவேளையும் சாப்பிடவும் இச்சாபத்தியம்.

## சண்டமாருதசெந்தூரம்.

| | | |
|---|---|---|
| பூரம் | விராகனிடை - | ௰ |
| லிங்கம் | ,, | ௰ |
| வீரம் | ,, | ௨ |
| கெந்தி | ,, | ௧ |
| ரசச்செந்தூரம் | ,, | ௧ |

இவைகளை கல்வத்திலிட்டு (௨) ஜாமம் அரைத்து சீசாவில்வைத்துக்கொள்ளவும் பனவெல்லத்தில் பணவிடைசெந்தூரம்வைத்து சாப்பிடவும் (௫ - ௭) நாள் கொள்ளவும் இச்சாபத்தியம் (௰௮) ஜன்னி வகையும் பிளவைபவுத்திரம் வாதம் (௮௰) வகையும் தனுர்வாதம், விரைவாதம், மூக்கல், கநிக்கல், புண், கிரந்தி, வெடிசூலை கண்டமாலை, பெரும்பாடு, வெவ்விதகாரம் அரையாப்பு, சிலந்தி, யாவும் தீரும்.

## பஞ்சபாஷாண செந்தூரம்.

| | |
|---|---|
| சூர்த்துகற்பூரம் | காந்தம் |
| ஜாதிலிங்கம் | ரசம் |
| மனோசிலை | சங்குபாஷாணம் |
| தாளகம் | கெந்தகம் |

இவைகள் வகைக்கு (௧) பலம்வாங்கி கல்வத்திலிட்டு மேனிச்சாற்றினால் (௩) ஜாமம் அரைத்து அப்படியே நிழலிலுலர

வைத்து மறுநாள் கருப்புவெந்திலைச்சாற்ருல் (ச) ஜாமம் மறுநாள் செம்பருத்திச்சாற்ருல் (ச) ஜாமம் வெள்ளருகு சாற்றில் துளசிச்சாற்றில் வேலிப்பருத்திச்சாற்றில் பொடுதலைச்சாற்றில் நாளொன்றுக்கு (ச) ஜாம ம்குறையாமல் அரைத்து ஒருசட்டியில் கருப்புவெத்திலைபரப்பி அரைத்தமருந்தை பில்லைதட்டி அதன்மேல்வைத்து மேல்சட்டிமூடி சீலைமண் (எ) செய்து அடுப்பிலேற்றி ஒரேஜாதிவிரகால் (ச) ஜாமம் யெரிக்கவும் அடிசட்டிசிவக்கக்கண்டால் தீயைவாங்கி கமலம்போல் யெரிக்கவும் இப்படி ஒருநாழிகை யெரித்தபின்யிரக்கி ஆரினபிறகுயெடுக்க செந்தூரமாம் சீசாவில் வைத்துக் கொள்ளவும் (இஞ்சி தேன் இவ.வகளில் (உ) அரிசியிடை கொடுக்கவும்,

சுரம், (கூச) ஜன்னி, (யகூ) குட்டம், (யஅ) கிரந்தி தலைசாய்ந்தவாய்வு, (உகூ) வாதம். (அய) மேகம் (உக) குன்மம், (அ) கிராணி, (கூ) மூடக்குருலை, வெடிகுலை, கன்னப்புத்து, யோனிப்புத்து, அண்டப்புத்து, கபாலகுட்டம், கண்டமாலை, குலைநோய், அரிகரப்பான், சொரிகரப்பான், தேமல், குழிவாழை, தொண்டைவாழை, அழுகண்ணி, அறையாப்பு, கபால்குத்தல், கண்ணோய், பவுத்திரம், பிளவைரிணம், மூலம், காசிரோகம், இடுப்புகுலை, இவையெல்லாம்தீரும் இச்சாபத்தியம் நோயின்திடமறிந்து (ரு - எ) நாள் கொடுக்கவும் மறுபத்தியமும் அப்படியேகார்க்கவும் பிறகு ஸ்நானம் செய்விக்கவும் குருகடாக்ஷம்.

## லிங்கசெந்தூரம்.

முதல்தரமான லிங்கம் (க) பலம் நிருத்தெடுத்து சித்திரமூலவேரின் பட்டையை கொண்டுவந்து அரைந்து ஷை லிங்கத்திற்கு கவசங்கட்டி சீலைமண்செய்து (ய) யெருவில் புடம்போட்டு ஆரியபின் யெடுக்கசெந்தூரமாம் தேனிலாவது இஞ்சிரசத்திலாவது அரிசியிடை. கொடுக்கவும் சகலவாய்வுகளையும் கண்டிக்கும் இச்சாபத்தியம்.

செந்தூரவகைப்பரணி

முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை.

# நான்காவது

# மெழுகுவகைபரணி.

சூதகவாய்விற்கு

## அண்டமெழுகு

ச - கோழிமுட்டையையுடைத்து ஓடுநீங்கலாக சமூலமும் ஒருகலயத்திலூற்றி ௰ரு - எலுமிச்சம்பழச்சார்விட்டு வீரம்பலம்-வ, பூரம்பலம்-வ, சாரம் பலம்-வ, படிகாரம் பலம் - வ, இவைகளை பொடியாக கல்வத்திலிட்டரைத்து ஷெ கலயத்தில் போட்டு ரு-நாள் சூரியபுடம்வைத்து சுண்டினபிறகெடுத்து அரைத்துவைத்துக்கொள்ளவும், (அனுபானம்) ஒருவேளைக்குமிளகுபிரமாணமாக ௲ - நாள் இருவேளையும்கொள்ளவும் இச்சாபத்தியம்.

---

## குங்குமப்பூமெழுகு

| | | | | |
|---|---|---|---|---|
| குங்குமப்பூ | விராகனிடை | ௨ | அக்கிராகாரம் | க |
| கோரோஜனை | ,, | ௨ | பளிங்குசாம்பிராணி | க |
| ரூமஸ்தகி | ,, | ரு | சிறுநாகப்பு | க |
| ஜாதிக்கா | ,, | உ | பழயவெல்லம் | க |
| கருஞ்சீரகம் | ,, | உ | | |

இவையாவும் கல்வத்திலிட்டு தேன் நிதானமாய்விட்டு மெழுகுபதமாய் அரைத்து கிளாசு அல்லது டப்பியில் வைத்துக் கொள்ளவும் மாலை ௬-மணிக்கு எலந்தங்காய்பிரமாணம் சாப்பிடவும் பசும்பால் உபயோகப்படுத்திவந்தால் மிகநன்று ௰-௰ரு-நாள்முறையாக சாப்பிட்டுவரவும் சாப்பிடுகிறவனாயில் அரைபுளிகூட்டுவது நலமாகும் ஸ்ரீபோகத்தில் மிகுந்த சுகத்தைக் கொடுக்கும் நாதம் கெட்டிப்படும்,

## ஒறணைறவிறையாதமெழுகு.

| | | |
|---|---|---|
| மிளகு | பலம் | க |
| பூரம் | களஞ்சி | க |
| லிங்கம் | விராகனிடை | ௨௰ |

இவையாவும் தேன்விட்டு ஒருஜாமம் அரைத்து மெழுகு பதத்தில் எடுத்து வைத்துக்கொள்ளவும் தூதனங்காய் பிரமாணம் காலைமாலை யிருவேளையுங்கொடுக்கவும் வாழ்வுபதார்த்தங்கள் நன்றாவதுடன் இச்சாபத்தியமிருக்கவும்.

## தோஷிசமிர்தமெழுகு

| | | |
|---|---|---|
| லிங்கம் | விராகனிடை | ௨௰ |
| பூரம் | ,, | ௨௰ |
| ஓமம் | பலம் | க |

இம்மூன்றும் கல்வத்திலிட்டு முலைப்பால்விட்டு (௩) ஜாமம் அரைத்து பிறகு தேன் அரைபலம் கொண்டுவந்து துளிதுளியாய்விட்டு ஒருஜாமம் அரைத்து கோப்பையில் வைத்துக் கொள்ளவும் குன்றிமணிப்பிரமாணம் எடுத்து தேனிலாவது இஞ்சிரசத்திலாவது கொடுக்கவும் ஜன்னிசுரதோஷம் தீரும இச்சாபத்தியம் மாலையில் மிளகு சுக்குகியாழம் கொடுக்கவும்,

## வீரமெழுகு

வீரம் ஒருபலம் கொண்டுவந்து மெல்லியசீலையில் முடிந்து யெடுத்து நாகயிலைநீர் (௪) கொண்டுவந்து உடைத்துப்பழங்கலையத்தில் ஊற்றி அடுப்பேற்றி அதில் முடி வீரத்தை விட்டு தொலாந்திரமாகக்கட்டி யெரிக்கவும் இரண்டுநாழிகை யெரிக்கானபிறகு கலையத்தை எடுத்துவிட்டு தொலாந்திரம் கட்டியிருக்கும் வீரமுட்டையை அடுப்புக்குநேராய் தொங்கவிட்டு அடுப்பின்நெருப்பை நன்றாய்க்கிளறி கனகனப்புக்காட்டவும் அந்தநெருப்புருதிளிர்ந்தவுடனே முடியை அவிழ்த்து மருந்தை பதனம்பண்ணிவைத்துக்கொள்ளவும் (அனுபானம்) மிளகுபிரமாணம் எடுத்

து தேன், முலைப்பால், அல்லது இஞ்சிசுரசத்திலாவது கொடுக்கவும் ஜன்னி சுரதோஷம் யாவுந்தீரும், இச்சாயத்தியம் மாலையில் மிளகுகியாழக்கொடுக்கவும்

---

## வேறுவிதவீரமெழுகு.

வீரம், பூரம், லிங்கம், சுத்திசெய்தவாளம், சுக்கு, திப்பிலி மிளகு, வகைக்கு ஒருவிராகனிடை யெடுத்து கல்வத்திலிட்டு தேன்விட்டரைத்து சிமிளில் வைத்துக்கொள்ளவும், (அனுபானம்) பேதிக்கு பட்டாணிப்பிரமாணம் சக்கரையில் அல்லது வாழைப்பழத்தில் கொடுக்கவும் பேதியதிகமானால் மோர்சாதங் கொடுக்கவும் தேனில், இஞ்சிரசத்தில் மிளகுபிரமாணங் கொடுக்க சகலவாய்வுந்தீரும் வாதத்தைகேழ்க்கப்பட்ட கியாழங்களிலுங்கொடுக்கலாம், அந்தியில் சுக்கு மிளகு கியாழங் கொடுக்க வேண்டியது.

மெழுகுவகைபாணி

முற்றிற்று.

---

இவ்வளவு வெள்ளியகடையாய் அச்சிட்டு பயிரங்கப்படுத்திய அனுபோகவயித்தியத்திற்கு சரக்குசுத்திகள்சொல்லவில்லையென கவலைப்படவேண்டாம் இதற்குமுதல்பாகம் வேறேயிருக்கின்றமையால் சகலவிஷயமும் அதிற்றெறிந்துக்கொள்ளலாம்.

இனி மூன்றும்பாகம் பிரயாணப்படும்.

உ

வேலுமயிலுந்துணை.

## ஐந்தாவது

# பற்பவகைபரணி.

## கற்பூரசிலாசித்துபற்பம்.

சிலாசத்து பலம் (க) பொட்டிலுப்பு பலம் (க) பொரிகாரம் பலம் (உ) இவைகளை சுண்ணாம்பு தெளிவுநீரில்அரைத்து (ச) பில்லைசெய்து அடுப்புத்தட்டில் காயவைத்து (ச) நாளானபிறகு யெடுத்து ஞ லுபில்லைக்கும் வெவ்வேராக சீலைமண் செய்து உலர்த்தி (கூ0) வரட்டியில் (ச) பில்லையும் வைத்து புடம்போட பற்பமாம் அதையெடுத்து சீசாவில் வைத்துக் கொள்ளவும் வெண்ணெயிலாவது சிரகக்கியாழத்திலாவது கொடுக்க நீர்உடையும் குளுத்தியான பதார்த்தம் சேர்க்கவும் இச்சாபத்தியம்.

## இன்னொருவித

## சிலாசத்துபற்பம்.

சிலாசத்து பலம் (க) பொரிகாரம் பலம் (க) இவைபொரித்துக்கொண்டு பழச்சாற்றுலாட்டி பில்லைதட்டி காயவைத்து (ய) வரட்டியில் புடமிட்டெடுக்கவும் நீரடைப்பு கல்லடைப்பு சதையடைப்பு நீர்கடுப்பு நீர்யெரிப்பு பிரமேகம் வெட்டை இவைதீரும் வெண்ணெயில் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

## இன்னொருவித

## சிலாசத்துபற்பம்.

சிலாசத்து பலம் (க) க்கு நாயுருவிக்கொழுந் தரைத்துக் கவசம்செய்து சுண்ணாம்புசீலைசெய்து (உ0) வரட்டியில் புடம்

போட பற்பமாம் சூடுதணியும் இத்துடன் கல்னூர்பற்பமுங்கலந்துகொடுக்கவும்.

## கல்னூர்பற்பம்

கல்னூர்பலம் (க) மேனிச்சார்விட்டரைத்து பில்லைதட்டி காயவைத்து மூனுசிலைசெய்து அகலில்வைத்து மேல்அகல்மூடிசிலைசெய்து (ருய) வரட்டியில் புடமிட பற்பமாகும்.

---

## சிங்கிபற்பம்

சிங்கியென்னும் கலைமான்கொம்பை கீந்து கீந்நாயுடைத்துவாழைமரத்தடியின்பெருங்கட்டையில் சொறுகிவைத்து (கூ) நாள் சென்றெடுத்து துத்தியிலையை யிடித்து கலக்க கவசமிட்டு (ரு) சிலைசெய்து (ருப) வரட்டியில் புடம்போட பற்பமாம்.

---

## சீனகாரபற்பம்

சீனகாரமென்னும் படிகாரம் பலம் (க) வசலையிலையில் ஐந்துயிலை யெண்ணிவைத்து அறைத்து பில்லைதட்டி காயவைத்து (ரு) சிலைசெய்து (கூய) வரட்டியில் புடமிட பற்பமாம்.

---

இங்கனம்கூறிய (ச) வித

## பற்பஉபயோகவிதி

கல்னூர், சிலாசத்து, சிங்கி, படிகாரம், நாலுவிதபற்பமும் சரியிடையாய்கலந்து சீசாவில்வைத்துக் கொண்டு வெண்ணையில் ஒருவிராகநிடை வைத்துசாப்பிடவும் இப்படி (ரு - எய) நாள் கொள்ள மேகம் உஷ்ணம் காங்கைதீரும் வெள்ளைக்குகற்கண்டுபொடி (கூ) சிட்டிக்கையில் (உ) விராகநிடை வைத்து சாப்பிடவும் புளி புகை போகம் தள்ளவும் இச்சாபத்திபம்.

## தாளகபற்பம்

ஒருபலம் தாளகத்தை பொடியாயிடித்து ஒருகலையத்திலிட்டு எருக்கன்பால் தளரவிட்டு ஒருநாள் சூரியபுடம்வைத்தெ

ந்து மேலோடுமூடி சீலைமண்செய்து (உம) வரட்டியில் புடம்போடவும் பற்பமாம் தேனில் அரிசியிடை கொடுக்க காச்சல் இருமல்தீரும் அயப்பொடியும் இப்படியே செய்துக்கொள்ளவும்.

## பவளபற்பம்.

செட்டிப்பவழம் ஒருபலம் வாங்கி மூசையில்போட்டு அதன்மேல் வெள்ளைபாஷாணம் (உ) பலம்பொடித்து பவழத்தின் மேல்போட்டு செப்புத்தகடுதட்டி மேல்வாய்மூடி சீலைமண்-டு செய்து (ம) வரட்டியில் புடம்போடவும் ஆரினபிரகெடுத்து வெள்ளெருக்கன் பால்விட்டரைத்து பில்லைதட்டி காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடுமூடி சீலைமண்செய்து (ம) வரட்டியில் புடம்போட்டெடுத்து கல்வத்தில் பொடித்து வைத்துக்கொண்டு ஸ்ரீகள் பிரசவித்தபோது காணுகிற அசாத்தியமான ஜன்னிக்கு அரிசியிடைதேனில் கொடுக்கவும் நீங்கும் இது சர்வ ஜன்னிக்குமாகும் இச்சாபத்தியம்.

## சிங்கிபற்பம்.

கலைமான்கொம்பை பிளந்து மேனியிலையை அரைத்து மேலுக்கு தளமாய் அப்பி முழுப்புடத்திலிட்டுவாங்கி பிரகு ஆவின்பால்விட்டரைத்து பில்லைதட்டி காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடுமூடி திரும்ப முழுப்புடம் போட்டுவாங்க தவளம் போல் இருக்கும் ஆவின்நெய்யில் இரண்டுபணவிடை கொள்ள மேகம் உஷ்ணம் காந்தல் நீர்சொரிப்பு நீங்கும் இச்சாபத்தியம்.

## லிங்கபற்பம்,

லிங்கம் (க) பலம்யெடுத்து கடலுப்பு ஆழாக்குகொண்டுவந்து கருந்துளசிச்சார்விட்டரைத்து லிங்கத்திற்கு கவசம்செய்து சீலைசுத்தி காயவைத்து (ம) வரட்டியில் புடம்போட்

டெடுக்கவும் பற்பமாம் ஜன்னிதோஷங்களுக்கும் குளிர்சுரங்களுக்கும் கொடுக்கவும் (அனுபானம்) இஞ்சிசுரசம் தேன் சக்கறை யிதுகளாகும்.

---

## வெள்ளீயபற்பம்.

வெள்ளீயம் (௧) டலங் கொண்டுவந்து இலைபோல் தகடு தட்டி நூலைப்போல் சன்னப்பொடிகளாகக் கத்தரித்து வைத்துக்கொண்டு புதியசடைக்கஞ்சா ஒருபலம் கொண்டுவந்து நெகிழ அறைத்து ஒருவட்டமான ஓட்டுபில்லையில் பாதிவைத்து அதன்மேல் கத்தரித்தபொடிகளைப் பரப்பி மேலே அறைத்த பில்லையைவைத்து மேலோடுமூடி சீலைமண் (௫) செய்து(௫௰) வரட்டியில் புடமிட்டெடுக்கவும் பற்பமாம் மேகங்களுக்கு வெண்ணை நெய்யில் பிரயோகப்படுத்தலாம் இச்சாபத்தியம்.

பற்பவல்கைபரணி

முற்றிற்று.

---

பற்பங்களைச் சேர்ந்த சரக்கு சுத்திகளும்இன்னும் பலவிதசெந்தூரங்களும் முதற்பாகத்தில்கூறியிருக்கின்றோமாகையால் முதற்பாகம் பார்த்துக் கொள்ளவும்.

இனி மூன்றாம்பாகம் பிரயாணப்படும்.

உ

வேலுமயிலுந்துணை.

# ஆறுவது

# சூரணவகைபரணி.

கழிச்சலுக்கு

## கபாடசூரணம்.

தயிரில் ஊறப்போட்டு உலர்த்திய சுண்டக்காய் வற்றல் கருவேப்பிலை ஓமம் பழய மாங்காய் பருப்பு அடைசாட்டியுலர்ந்த நெல்லிக்காயூருகாய் மாதளம்பழத்தோல் வெந்தியம் இவை வகைக்கி கால்பலம், ஜாதிக்காய் ஒன்று எட்டுதினுசுகளும் கல்லுரலிலிட்டு யிடித்து வஸ்திரகாயம் செய்துவைத்துக் கொண்டு வடிக்கட்டி நீர்போக்கிய யெருமைத்தயிர் அறையாழாக்கில் ஷி சூரணம் கால்பலம் போட்டுசாப்பிடவும் இப்படி இருவேளையும் மூன்றுநாள் சாப்பிடவும் வயிறிரைச்சல் அதிசாரம் மூலக்கிராணி கழிச்சல் பவனவாயெரிச்சல் இவைதீரும் காரம்மட்டாகக்கூட்டி போஜனம் செய்யவும் கழிச்சலுக்குத்தகுந்த பிரயோக மென்றறிய,

---

குன்மம் (கூ) க்கும்

## உப்புசூரணம்.

உப்புபடி (க) யெருமைமோர்படி (க) வரிக்குமட்டிச்சார்படி (க) இந்துப்பு வெடியுப்பு சவுட்டுப்பு வளையலுப்பு வகைக்கி பலம் அறிக்கால் இவையாவும் ஒன்றாகப்போட்டு அடுப்பேற்றி யெரித்துக்கொண்டிருப்பதுடன் பூவரசங் குச்சியினால் கிளரவும் சக்கரைபோலாகும் சமயத்தில் யிரக்கிவைத்துக்கொள்ளவும் ஒரு விராகனிடை உப்பு வாயில்போட்டுக்கொண்டு நீராகாரம் சாப்பிடவும் வாய்வு சோகைகாமாலை எரிவு கவிசை கிரி

ச்சிளம்கெண்டை இவைதீரும் இச்சாபத்தியம் குன்மமாருக்கும் ஓர்விதததகுந்த பிரயோக மிதுவாம்.

## இஞ்சிசூரணம்.

மேல்பரணி சீவிய இஞ்சி பத்துபலம் நிருத்தெடுத்து பில்லைபில்லையாயருத்தெடுத்து நெய்யில்வருத்து பொடிசெய்துவைத்துக்கொண்டு சுக்கு திப்பிலி மிளகு ஏலம் கிராம்பு ஓமம் சீரகம் வாலுமுளவை ஜாதிக்கா திப்பிலிமூலம் அதிமதுரம் குராசாணி ஓமம் அமுக்குரா கசகசா லவுங்கப்பத்திரி கொத்தமல்லி பேரீச்சு முந்திரிக்கை வகைக்கு கால்பலம் இளம்வருப்பாகவருத்து சூரணம்செய்து சீனிபலம் (பத்து) பொடித்துயாவும் ஒன்ருய்க்கலந்துவைத்துக்கொண்டு வேளைக்கி கால்பலம் வீதமாக காலைமாலை இருவேளையும்சாப்பிட்டுவரவும் உஷ்ணம் பித்தவாய்வு தீரும் பசிதீபனம் உண்டாம் அன்ருடமலம் பரிசுத்தமாய் கழியும்.

## கருங்கோழிசூரணம்.

முத்தினகருப்புச்சாவல் கொண்டுவந்து மயிர்களைப்போக்கி கால் தலை அருத்தெரிந்துவிட்டு முதுகைக்கிரி வயற்றிலுள்ள குடல்முதலான அசுத்தங்களை நீக்கிவைத்துக்கொண்டு

| | |
|---|---|
| இந்துப்பு | கருஞ்சீரகம் |
| கல்லுப்பு | வெள்ளுள்ளி |
| வளையலுப்பு | சீரகம் |
| சவுட்டுப்பு | வாய்விளங்கம் |
| கரியுப்பு | ஜாதிக்காய் |
| கிராம்பு | லவுங்கப்பத்திரி |
| சிவநாகப்பு | ஏலம் |
| பெருங்காயம் | தாளிச்சபத்திரி |
| சுக்கு | ஓமம் |
| மிளகு | நவாச்சாரம் |
| திப்பிலி | சத்திசாரம் |

இவைகள் வகைக்கி (கவ) விராகநிடைவாங்கி இடித்து வஸ்திரகாயம்செய்து கல்வத்திலிட்டு பிரண்டைச்சார் சித்திரை

மூல்ச்சார் வேலிப்பருத்திச்சார் பேய்த்தும்மட்டிச்சார் ஞல்வ கைச்சாற்றினுலும் (ச) நாழிகை அறைத்து குக்குடத்தில் வய ற்றிலடைத்து நாலினுல் தைத்துவிடவும் பெரும்சட்டியாக இரண்டு கொண்டுவந்து இரண்டிற்கும் உட்புரத்தில் ஷிசா ற்றைதளமாய்பூசி ஒருசட்டியில் குக்குடத்தைவைத்து கரிச்சா லைச்சாறு (ச) படி மேனிச்சாறு (ச) படி பசுங்கோமியம் (ச) படி ஆக (யஉ) படியும் ஊத்தி மேல்சட்டிமூடி வாய்தெரியா மல் மண்சீலைசெய்து ஒருஜாதிவிரகால் யெரிக்கவும் சாரெல் லாம் வற்றுமளவும் யெரித்து யிரக்கிக்கொண்டு யெலும்பெல் லாம்போக்கி மற்ற யாவற்றும் சூரணமாக வறைத்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் வேளை ஒன்றுக்கு திருகடிபிரமாணமாக யிருவேளையும் சாப்பிடவும் வியாதிக்கிசைந்தவாறு(ய-உய-சய) நாள் சாப்பிடவும் அஷ்டகுன்மம் சோகை மகோதரம் பாண்டு நீர்க்கோவை வெப்புகாச்சலினுல்வரும் கெண்டைக்கட்டி வாய் வுவாதம் இவைகள்தீரும் மீன் மரக்கரிகள்ஆகாது தயிர் மோர் நெய் வெள்ளாட்டுகரி வத்தல் இதுகள் ஆகும்.

---

## வெள்ளாட்டு

## ஓதப்பைசூரணம்.

வெள்ளாட்டு ஓதப்பை யென்பது ஆட்டினது தீனிக்கு டல்யென்பர் அதைக்கொண்டுவந்துஜெலத்தினுல் அலம்பி சுத் திசெய்து பிழிந்து காயவைத்து யிடித்து சூரணமாக்கி (உ) ப லம் நிருத்தெடுத்துக்கொண்டு

| | |
|---|---|
| * குங்குமப்பூ | சித்தரத்தை |
| * கோரோஜனம் | கருஞ்சீரகம் |
| * கற்கண்டு | கோஷ்டம் |
| * மனோசிலை | நெற்பொரி |
| சீரகம் | ஆடாதொடைவேர் |
| கிராம்பு | திப்பிலிமூலம் |

இவைகள் வகைக்கி (கவ) விராகநிடையாக வாங்கி * இந் த்அடையாளம்வைத்த நாலுதினுசும் நீங்க மற்றதை இளம்வ றுப்பாகவறுத்து யாவும் ஒன்றிட்டு யிடித்து சூரணம்செய்து

முன்செய்த சூரணத்துடன் கலந்து வெள்ளாட்டுப்பாலில்பிசிரி உலர்த்தி வைத்துக்கொள்ளவும் பசும்நெய்யில் திருகடிபிரமாணம்வைத்து சாப்பிடவும் இப்படி இருவேளை அரைமண்டலம் கொள்ளவும்.

சேத்துமம் தொண்ணூற்றியாறு காசம் என்பது யிளை இருமல் வாதம் பித்தம் பித்தவாய்வு வரட்சி உப்பிசம் வாந்தி யிறைப்பு சகலமும் தீரும், வெள்ளாட்டுக்கரி வத்தல் நெய்பால் ஆகும் தயிர்மோர் புளிப்பு வகைப்பு புகைபோகம் லாகிரி ஆகாது.

## ஸ்ரீ தந்த சூரணம்.

| | | |
|---|---|---|
| அன்னபேதி | விராகனிடை | ௫ |
| தண்டவாளப்பொடி | ,, | ௮ |
| படிகாரம் | ,, | ௫ |
| மாசிக்காய் | ,, | ௫ |
| துருசு | ,, | ௫ |
| வெள்ளைக்காசுகட்டி | ,, | ௫ |
| குராசானி ஓமம் | ,, | ௫ |
| வசம்பு | ,, | ௫ |
| கொட்டைப்பாக்கு | ,, | ௪ |
| ரசபற்பம் | ,, | ௫ |
| வேப்பம்வேர்பட்டை | ,, | ௪ |
| அமுக்குராவேர் | ,, | ௫ |

இவைகளைக்கல்லுரலிலிட்டு யிடித்து தூள்செய்து வஸ்திரகாயமிட்டு டப்பியில் வைத்துக்கொள்ளவும் இரவில் போஜனம்செய்வதற்குமுன்னர் இந்தசூரணத்தில்ஒரு சிட்டிக்கையெடுத்து பல்தேய்த்து வெந்நீரினால் வாய்கன்றுக்கொப்பளித்து சுத்திசெய்துக்கொண்டபிறகு அன்னம்பொசித் துரங்கவும் இப்படிசதாகாலம் இரவில் துலக்கிவருவதினால் பெண்களுக்கு பற்களிருகுவதுமன்றி மாதவிடாயென்னும் ரகசிய ஸ்தானம் குருகலாகும் அதனால் தேககாந்தியும் முகவசீகரமும் பெண்களுக்கு வலிவுமுண்டாகும் இப்பொடி புருஷருக்கன்று.

## நாபிரெணத்திற்கு
## குங்கிலியச்சூரணம்.

வெள்ளை குங்கிலியம் ஒருபலம் கொண்டுவந்து (ரு) யிள நீர்உடைத்து சட்டியில்வூற்றி குங்கிலியக் கட்டியை அதில் போட்டு அடுப்பேற்றி நீர் சுண்டுகிறவரையில் யெரித்து பிரகு குங்குலியத்தை கல்வத்திலிட்டு பொடித்து சூரணமாக்கி புட்டியில் வைத்துக்கொள்ளவும் இரண்டு அரிசியிடை சூரணத்தை வெண்ணெ அல்லது நெய்யில் குழைத்து கொடுக்கவும் நாபிரெணம் உலர்ந்து சூடுதணியும்.

---

## திரிகடுகுசூரணம்.

சுக்கு திப்பிலி மிளகு சரியிடைதூக்கி உலர்த்திபிடித்து வஸ்திரகாயம்செய்து சீசாவில்வைத்துக்கொண்டு வேண்டிய போது காலணாயிடை சூரணத்தை பனைவெல்லம்கூட்டி பிசைந்து சாப்பிடவும் (அ - ம - மரு) நாள் கொள்ள வாய்வுகள் மாந்தக்கழிச்சல் முதலியவியாதிகள் தீரும். மற்றமேகாதி பற்பங்களுக்கும் யிது அனுபானமாமென்றறிக,

சூரணவகைபரணி

முற்றிற்று.

---

இவ்வளவு வெள்ளியநடையாய் அச்சிட்டு பயிரங்கப் படுத்திய அனுபோகவயித்தியத்திற்கு சரக்குசுத்திகள்சொல்லவில்லையென கவலைப்படவேண்டாம்இதற்குமுதல்பாகம் வேறேயிருக்கின்றமையால் சகலவிஷயமும் அதிற்தெறிந்துக்கொள்ளலாம்.

இனி மூன்றும்பாகம் பிரயாணப்படும்.

உ

வேலுமயிலுந்துணே.

ஏ ழ ா வ து

# எண்ணெய்வகைபரணி.

பிள்ளேகள்கணத்திற்கும்

பெரியவர்கள் மேகத்திற்கும்

## நெ ய ண் வ ண.

| | | |
|---|---|---|
| அவுரிச்சார் | படி | வ |
| குப்பைமேனிச்சார் | ,, | வ |
| சித்தாமணக்கெண்ணெய் | ,, | வ |

இம்மூன்றும் ஒன்றாய்கலந்து அடுப்பேற்றி கருப்புவெத்திலேச்சார் (உ) ரூபாயிடைவிட்டு ஒருநாழிகையெரித்து வசம்புயிடித்து வஸ்திரகாயம்செய்து சித்தாமணக் கெண்ணேவிட்டரைத்தவிழுது (௨) ரூபாயிடை அத்துடன்போட்டு கலேக்கி மெழுகுபதமாகுமட்டும் சாச்சிவடித்து பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு நாள்வொன்றுக்கு கரண்டிவீதம் (ரு) அல்லது (எ) நாள் கொடுக்கவும் இச்சாபத்தியம் வயற்றிலுள்ள கசடெல்லாம் போகும்.

ஸ்ரீபோகமேகத்தால்வந்த

## வெள்ளாக்கியெண்ணை.

| | | |
|---|---|---|
| பரங்கிச்செக்கை | பலம் | ௩ |
| பீச்செங்கன்வேர் | ,, | உ |
| பூமிசக்கரைக்கிழங்கு | ,, | க |
| நரிமிரட்டிவேர் | ,, | க |
| மிளகரணேவேர் | ,, | க |

| | | |
|---|---|---|
| சுக்கு | ,, | க |
| தாணிக்காய் | ,, | க |
| கருஞ்சீரகம் | ,, | க |
| முதல்தரம்சந்தனம் | ,, | க |
| ஆடுதின்னாப்பாளை | ,, | உ |
| மாவிலிங்கம்பட்டை | ,, | உ |

இவைகளை யுலர்த்தி யிடித்து வஸ்திரகாயம்செய்து (ய) பலம் சித்தாமணக் கெண்ணெயில் கலந்து அடுப்பேற்றி மெழுகுபதமாய்காய்ச்சி யிரக்கும்போது பூரம் (உ0) விராகனிடை யெடுத்து ஷை யெண்ணெவிட்டரைத்து கலக்கிவைத்துக் கொண்டு வேளைக்கி கரண்டி.வீதம் (௩) அல்லது (ரு - எ) நாள் சாப்பிடவும் கொள்ளு யெள்ளு பூசினி அவுத்தி மீன் கருவாடு லாகிரி புகை போகம் இவையாகாது மறுபத்தியமும் இவ்வாறிருந்து ஓம்மதேய்த்துத் தலைமுழுகவும்.

---

## கொறுக்குவெள்ளைக்கு

## எண்ணை.

| | | |
|---|---|---|
| பூரம் | விராகனிடை | - க |
| ஓமம் | ,, | க |
| ஏலம் | ,, | க |
| லவுங்கம் | ,, | அ |

இவைநான்கும் செம்பருத்திச்சார்விட்டு(ச)ஜாமம் அறைத்து (ரு) பலம் விளக்கெண்ணெயில் கலக்கி ஒருநாள் சூரியபுடம்வைத்து மறுநாள்முதல் காலையில் கரண்டிவீதம் (ரு) அல்லது (எ) நாள்சாப்பிடவும் இச்சாபத்தியம் மறுபத்தியம் அவ்வாறே யிருக்கவும் தீரும்.

## பொக்குமேகத்திற்கு

## எண்ணை.

அகத்திச்சார் வெங்காயச்சார் மணத்தக்காளிச்சார் வகைக்கி பலம் (உ) உத்தாமணிச்சார் உழக்கு விளக்கெண்ணெய் படி (உ) இவையாவும் ஒன்ருய்க்கலந்து பூரம் (உ0) விராக

நிடையெடுத்து ஷை யெண்ணெய்விட்டுஅரைத்து அத்துடன் கலக்கி சூரியபுடம் மூன்றுநாள்வைத்தெடுத்து காலையில்கரண்டிவீதம் (௫ - ௭) நாள் சாப்பிடவும் கடும்பத்தியமிருக்கவும்மாலையில் திருகடுகுகியாழம் கொடுக்கவும்

---

### கை கால் பிடிப்புக்கு

## யெண்ணெ.

| | | |
|---|---|---|
| விளக்கெண்ணெய் | பலம் | ௰ |
| சுத்திசெய்தவாளம் | விராகனிடை - | ௪ |
| ஏலம் | ,, | ௨ |
| சுக்கு | ,, | ௨ |
| பூரம் | ,, | ௨ |
| புங்கம்பால் | பலம் | ௧ |

இம்மருந்துகள் நாலுவகையும் கல்வத்திலிட்டு விளக்கெண்ணெவிட்டரைத்து ஷை யெண்ணெயில் கலக்கி மூன்று நாள் சூரியபுடம்வைத்தெடுத்து காலையில் கரண்டிவீதம் (௫ - ௭) நாள்சாப்பிடவும் சுட்டபுளி வருத்தஉப்பு கூட்டவும்.

---

## விரைவாதயெண்ணெய்.

| | | |
|---|---|---|
| சித்தாமணக்கெண்ணெய் | படி - | ௨ |
| குப்பைமேனிச்சார் | ,, | ஹூ |
| முடக்கொத்தான்சார் | ,, | ஹூ |
| வெள்ளைகாக்கட்டான்சார் | ,, | ஹூ |
| கெச்சக்காய்வேர் | பலம் | ௨ |
| வெள்ளைப்பூண்டு | ,, | வ |
| கருஞ்சீரகம் | ,, | வ |
| வசம்பு | ,, | வ |

கடைசரக்குயாவும் யிடித்து யெண்ணெய் விட்டரைத்து ஷை யெண்ணெயுடன்கலக்கிஅடுப்பேற்றிமெழுகுபதமாய்காய்ச்சிவடித்து (௫) அல்லது (௭) நாள் சாப்பிடவும் வாய்வுபண்டங்கள் ஆகாது இச்சாபத்திய மிருக்கவும்.

# குளித்தியெண்ணெய்.

மணத்தக்காளிரசம் படி (வ) கத்தாழைமடல்சோரு பலம் (ரு) பரிங்கி செக்கை பலம் மூணுவீசம் கண்ணுல முருக்கன் பட்டைரசம்ஆழாக்கு வெள்ளைவெங்காயரசம் பலம் (உ௦) சித்தாமணக்கெண்ணெய் படி (வ) பேயம் வாழைப்பழம் (உ) வெந்தியம் விராகனிடை (க) பனவெட்டு விராகனிடை (உ௦) கற்கண்டு விராகனி (உ௦) இவையாவும் ஒன்றாய்கலந்து அடுப்பேற்றியிளம்பதமாய் காசசியிரக்கி காலையில் கரண்டிவீதம் (எ) நாள்சாப்பிடவும் இச்சாபத்தியம்.

---

## சகலரெணத்திற்கும்

## எண்ணெய்.

| | | |
|---|---|---|
| கொடிக்கள்ளிசார் | படி - | ஹ |
| சித்திரமூலவேர் | பலம் | க |
| எருக்கன்வேர் | ,, | க |
| கொடிக்கள்ளிவேர் | ,, | க |
| அமுக்கனங்கிழங்கு | ,, | க |
| ரசம் | களஞ்சி | க |
| ரசச்செந்தூரம் | ,, | க |
| கெந்தகம் | ,, | க |

வேறுவகையாவும் யிடித்து சூரணித்து மற்றசரக்குயாவும் கல்வத்திலிட்டு விளக்கெண்ணெவார்த்து (உ) ஜாமம்அரைத்து ஒருபடி விளக்கெண்ணெயில் போட்டுக் கலக்கி ஷை கள்ளிச்சாறும்விட்டு மெழுகுபதமாய் காய்ச்சி வடித்து காலையில் உச்சிக்கரண்டிவீதம் (ரு) அல்லது எ) நாள்சாப்பிடவும் இச்சாபத்தியம் அறைபுளி அறைகாரம் சேர்க்கவும் சுட்டபுளி உப்புசேர்ப்பதே உத்தமம்.

---

# வெள்ளெண்ணெய்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுக்கு | விராகனிடை - | உ௦ | வாளம் | விராகனிடை | உ |
| ஏலரிசி | ,, | உ௦ | பூரம் | ,, | உ |

இவைகளை கல்வத்திலிட்டு விளக்கெண்ணெவிட்டு இரண்டுஜாமம் அரைத்து (ம) பலம் விளக்கெண்ணெயில் கலக்கி ஒருநாள் சூரியபுடம்வைத் தெடுத்துக்கொள்ளவும் குழந்தைகள் கால்சிரங்கு தலைச்சிரங்கு மாந்தம் கணம் பொருமல்வாய்வுகள் யாவும் தீரும் காலையில் கரண்டிவீதம் (ரு) நாள் (எ) நாள் கொடுக்கவும் இச்சாபத்தியம்

{ஒட்டுப்புண் கண்டமாலை மேகவாய்வு பக்சசூலை இதுகட்கு}

## இரசகற்பூரயெண்ணெய்.

| | | |
|---|---|---|
| பூரம் | விராகனிடை - | கவ |
| லவுங்கம் | ,, | க |
| மிளகு | ,, | க |
| பரிங்கிச்செக்கை | ,, | க |

இவைகளை உலர்த்தியிடித்து கல்வத்திலிட்டு பரித்தியிலைச்சார்விட்டு ஒருஜாமம்அரைத்து (ம) பலம் விளக்கெண்ணெயில்கலக்கி அத்துடன் பரித்தியிலைச்சாறும் அரையாழாக்குவிட்டு நன்றாய்கலக்கி ஒருநாள் சூரியபுடம்வைத்து யெடுத்துக்கொண்டு காலையில் உச்சிக்கரண்டிவீதம் (ரு) நாள் அல்லது (எ) நாள்சாப்பிடவும் கடும்பத்திய மிருக்கவும்.

## மாந்தயெண்ணெய்.

| | |
|---|---|
| சுக்கு | கோஷ்டம் |
| திப்பிலி | ஜாதிக்காய் |
| மிளகு | லவுங்கம் |
| ஓமம் | ஜாபத்திரி |
| சீரகம் | அரத்தை |
| கருஞ்சீரகம் | சித்தரத்தை |
| அக்கிராகாரம் | சம்பங்கிமொக்கு |
| குராசானியோமம் | சுருள்பட்டை |
| அதிமதுரம் | காட்டுசீரகம் |

இவைகள் வகைக்கிவிராகனிடை (க) கடுகுரோகணி பலம் (உ) மயிர்மாணிக்கம் வேரின்பட்டை பலம் (உ) இவைகள்யா

வும் வெய்யலில்உலர்த்தி யிடித்து வஸ்திரகாயம்செய்து (ரு) படி விளக்கெண்ணெயில் போட்டு கலக்கிவைத்துக் கொண்டு பூரம் விராகனிடை (ரு) விளக்கெண்ணெவிட்டு ஒருஜாமம் அறைத்து ஷை யெண்ணெயில் நன்ருய் கலக்கி சூரியபுடம் ஒருநாள்வைத்தெடுத்து காலையில் உச்சிக்கரண்டி வீதம் (ரு-எ-ய) நாள் சாப்பிடவும் மாந்தம் கணம் உட்காச்சல் மேகத்தால்வந்த வியாதிகள் வாய்ரிணம் அச்சுரம் அஜீர்ணம் இவைகள்தீரும் மீன் கருவாடு மாமிசம் யிரச்சியாகாது இச்சாபத்தியம்.

---

## அச்சரத்திற்குயெண்ணை.

வசம்பு
வெங்காயம்
கருஞ்சீரகம்
பெருங்கிழங்கு
நிலப்பனங்கிழங்கு
காட்டுக்கருணைக்கிழங்கு
புளிக்கருணைக்கிழங்கு
வெள்ளருகு
நஞ்சருப்பான்வேரு
கடுகுரோகணி
தும்பராஷ்டகம்

இவைகள் வகைக்குபலம் (க) ஆத்துதும்மட்டிக்காய் (உ) சவுரிக்கிழங்கு பலம் (க) இந்ததினுசுகள்யாவும் பஞ்சுபோ லிடித்துஒருபடி விளக்கெண்ணெயில்போட்டு காச்சியடித்து வைத்துக்கொண்டு உச்சிக்கரண்டியளவு வார்க்கவும் (ச-ரு)விசைபேதியாகும் அதிகமாய்பேதியானல் ஓமம்கொண்டுவந்து வென்னீரில்அறைத்து அந்தபால்பிழிந்து (க) அல்லது (உ) பாலடைவார்க்கவும் எண்ணெ (ங) நாள் கொடுக்கவும் சுட்டபுளி வருத்தவுப்பு கூட்டவும் சிறுபிள்ளையானல் தாய் பத்தியமிருக்கவேண்டியது.

---

## காப்பானுக்குயெண்ணை.

வசம்பு
கருஞ்சீரகம்
கார்போகஅரிசி
சீரடிமுத்து
வெங்காயம்
சங்கம்பட்டை
மூளகருணை
சங்கம்குப்பியெலை
செங்கத்தாரியிலை
கடுகுரோகணி
செம்புறுப்பட்டை

இவை வகைக்கிபலம் (க) யெண்ணெபடி (க) இந்தமருந்தெல்லாம் பஞ்சுபோல் யிடித்து யெண்ணெயில்போட்டு கடுகு திரளக்காச்சி வடித்து சிறுகரண்டிவிதம் (ரு - ரு) நாள் கொடுக்கவும் அடியிலுள்ளகடுகை யெடுத்து கெந்தகம்சேர்த் தரைத்துகரப்பான் ரிணத்தின்பேரில் பூசவும்.

வெண்ணெய்வகைபரணி

முற்றிற்று.

இன்னுமுள்ள எண்ணெய் முறைகள் யாவும் முன்னர் அச்சிட்டிருக்கும் முதற்பாசத்தில் கண்டுக்கொள்ளலாம்.

இனி மூன்றும்பாகம் பிரயாணப்படும்.

உ

வேலுமயிலுந்துணை.

எட்டாவது

# தைலவகைபரணி.

## அண்டத்தயிலம்.

கோழிமுட்டை (௰)கொண்டுவந்து அவித்து மஞ்சள் கருவையெடுத்து எண்ணெ பழகியசட்டியில்போட்டுஅடுப்பில்வைத்து யெரித்தால் தைலமிரங்கும் யெரிக்கும்போதுகிளரிக்கொண்டிருக்கவேண்டியது அத்தயிலத்தை ஒரு கோப்பையில்யிருத்துக்கொண்டு பிரகு இரண்டுபலம் பூண்டுகொண்டுவந்து மேற்றோல் உரித்து கல்வத்தில் போட்டு அறைத்து கொஞ்சம் உமிபோட்டுப் பிசிரி பிழிந்தால் தைலமிரங்கும் கஸ்தூரி விராகநிடை (வ) குங்குமப்பு விராகநிடை (௨) கோரோஜனை விராகநிடை (௨) இம்மூன்றும் பூண்டு தயிலத்தில் குழைத்து ஷெ அண்டத்தயிலம் ஒன்றுய்கலந்து குலிக்கி சீசாவில் வைத்துக்கொண்டு பெரியதுட்டிடை நாக்கில் தடவவும் சகலதோஷமும் தீரும் நாவரட்சி வாய்வுமுதலானதும் தீரும் இப்படி (௩-௫) அல்லது (௭) நாள் கொடுக்கவும் கடும்பத்தியம்.

## தலைவலிக்கிதைலம்.

| | | |
|---|---|---|
| இஞ்சிச்சாறு | படி | ஹ |
| கருஞ்செம்பைச்சாறு | ,, | ஹ |
| கஸ்தூரிமஞ்சள் | பலம் | ௧ |
| மிளகு | ,, | ௰ |

இரண்டுவகையும் யிடித்து சூரணித்து (ஹ) படி நல்லெண்ணெயில் போட்டு இருவகைக் சாறும் ஊத்தி அடுப்பேற்றி

கடுகுபதத்தில் காச்சியிரக்கி (ச) நாள்வட்டமாக (ச) ஸ்தானம் செய்யவும் தீரும்.

### கண்சாலேசுரத்திற்கு

## சந்தநாதித்தைலம்.

| | | |
|---|---|---|
| சந்தண அத்தர் | பலம் | வ |
| கஸ்தூரி | ,, | ஹ |
| ஓமப்பூ | ,, | ஹ |
| வலாரிவேர் | ,, | ஹ |
| அவுரிவேர் | ,, | ஹ |
| மாவிலிங்கம்வேர் | ,, | ஹ |
| பொன்னுங்கண்ணிவேர் | ,, | ஹ |
| ஒரிலைத்தாமரைவேர் | ,, | ஹ |
| செப்புநெரிஞ்சிவேர் | ,, | ஹ |
| அமுக்கனுங்கிழங்கு | ,, | ஹ |
| கஸ்தூரிமஞ்சள் | ,, | ஹ |

இவைகளில் கஸ்தூரியும் அத்தரும் தவிர மற்ற தினுசுகளை வெய்யலில் உலர்த்தியிடித்து சூரணம்செய்து அரைப்படி நல்லெண்ணெயில் போட்டு கடுகுபதமாய் காச்சிவடித்து (ச) நாள்வட்டமாக நாலுஸ்தானம் செய்யவும் கண்சாலேசுரம் உடனேநீங்கிப்போகும்.

---

## கழுத்திசுவுக்குதைலம்.

ஒரு பேய்த்துமட்டிக்காயை சிறுபில்லைகளாக அருத்து (ரு) பலம் நல்லெண்ணெயில்போட்டு துட்டிடை கிச்சிலிக்கிழங்கு துட்டிடை கஸ்தூரிமஞ்சள் ஒருவிராகனிடை கஸ்தூரி இவைகளைப்பொடித்து பெண்ணெயில்போட்டு காச்சி தலைமுழிகிவரவும் கழுத்திசுப்பு நீங்கும்.

### சர்வரிணத்திற்கும்

## சிங்கித்தைலம்.

| | |
|---|---|
| முதார்சிங்கி | படிகாரம் |
| கெந்தகம் | நீலம் |
| சூதம் | பரிங்கிசெக்கை |
| நாவி | துத்தம் |
| வசம்பு | கடுக்கா |

இவைகள் வகைக்கிபலம் (வ) யெடுத்துயிடித்து தூள்செய்துவைத்துக்கொண்டு புங்கம்பால்ஓதியம்பால் வகைக்கி ஆழாக்கு தேங்காயைத்திரிகி உழக்குபால் பிழிந்து அந்தபாலை காச்சி நெய்யெடுத்து அந்த நெய்யில் சரக்குத்தூளை சேர்த்து ஷ இருவகையாலும் விட்டு வெங்காயச்சார் ஆழாக்குவிட்டு கடுகுதிரளக்காச்சி யிரக்கிவைத்துக்கொண்டு அரைப்புரிணம் ஆராதபுண புணாரிணம் குழிப்புண் இரத்தக்கசிவுரிணம் ஆரியாரிசினக்கும் ஆணிரிணம் சிங்கிரிணம் இதுகளுக்கெல்லாம் பூசவும் ஆரிவிடும்.

## தைலவகைபரணி

### முற்றிற்று.

தைலங்களைச் சேர்ந்த சரக்குசுத்திகளும் இன்னும் பலவிதசெந்தூரங்களும் முதற்பாகத்தில்கூறியிருக்கின்றே மாகையால் முதற்பாகத்தில் பார்த்துக்கொள்ளவும்.

இனி மூன்றும்பாகம் பிரயாணப்படும்.

உ

வேலுமயிலுந்துணை.

# ஒன்பதாவது

# லேகியவகைபரணி.

## பித்தயெரிவிற்கு லேகியம்.

சுக்கு
திப்பிலி
மிளகு
லவுங்கம்
ஏலம்
சாதிக்கா
சாபத்திரி
தாளிசப்பத்திரி
லவுங்கப்பட்டை
சீமைஅத்திப்பழம்
பேதார்னும்
சாலாம்பிசினி
சீரகம்
கொத்தமல்லி
சோம்பு
சக்கரை
பரிங்கிச்செக்கை
அமுக்கனுங்கிழங்கு
நிலப்பனங்கிழங்கு
தண்ணிவிட்டாங்கிழங்கு
விழலரிசி
எலுமிச்சம்விரை
நெல்லிக்காய்
கடுக்கா
தாணிக்கா
விளாம்பழம்
திராக்ஷிப்பழம்
முந்திரிப்பழம்
பேரீச்சம்பழம்

இவைகள் தினுசுக்கு பலம் (க) இஞ்சிரசம் பலம்(௰) பழரசம் பலம் (௰)புளிப்புமாதளம்ரசம் பலம் (௰)யிளநீர் பலம் (௰)நாட்டுச்சக்கரை ஒ வீசை, தேன்பலம்(௰)நெய்பலம் (௰)பசும்பால் ஒருபடி மேற்கூரியதினுசுகளில் பழவர்க்கம்தவிர மற்றவையாவும் யிளம்வருப்பாகவருத்து யிடித்து சூரணித்து வஸ்திரகாயம்செய்துக்கொண்டு பழம், பால், நெய், ரசங்களின் வகையாவும் ஒன்ருய்க்கலந்து அடுப்பேற்றி சக்கரைனயக் கொட்டி பாகுபதமாய் வரப்பார்த்து முன்வஸ்திரகாயம்செய்த தூளைக் கொஞ்சகொஞ்சமாய் போட்டு கிளரிக்கொண்டுவருக ஷை தூள் முழுமையும் பூர்த்தியானபிறகு கைவிடாமல் சற்றுநேரம் கிண்டி அடிபிடிக்காமுன்னம் ஜாக்கிரதையாகபார்த்து யிரக்கிவைத்

தக்கொண்டு தேன்விட்டுகிளறி கோப்பையில்வழித்துவைத்துக்கொள்ள வேளைக்கி கெச்சக்காய்ப்பிரமாணம் காலைமாலை யிருவேளையும் ஒருமண்டலம் சாப்பிடவும் இச்சாபத்தியம் புகை, சுருட்டு, கள்ளு, சாராயம், பெண்போகம், அன்னியபதார்த்தம், நல்லெண்ணைகடுகு இதுகளாகாது, பித்தயெரிவு, குலையெரிவு, பித்தவாய்வு, மேகவாய்வு, மேககாரிகம் இவைதீரும்.

---

## ஊஷ்ணத்திற்குலேகியம்.

சுக்கு பலம் (௫) அரிசித்திப்பிலி பலம் (க) திப்பிலியை ஒரு சூடுவையில்போட்டு கொஞ்சம் உமியைப்போட்டு அது முழுகும்படி ஜெலம்விட்டு வேகவைத்து யிரக்கி திப்பிலியை யெடுத்துக்கொணடு சுக்கும்கூடச்சேர்த்து கல்வத்திலிட்டு நெகிழ அறைத்து பில்லைதட்டி எண்ணைஊரிய சட்டி அடுப்பில் வைத்து (உ௫) பலம் நெய்விட்டு அதில் பில்லையைவைத்து (௫) நாழிகையெரிக்கவும் பிரகுயெடுத்து கல்வத்தில்வைத்துஅறைத்து பில்லைதட்டி மறுபடியும் நெய்யில்வேகவைக்கவும் இப்படி ஐந்துவிசை அறைத்து வேகவைத்தெடுக்க யிளகியிருக்கும் லேகியமாக பிசைந்து வைத்துக்கொண்டு சுண்டக்காய் பிரமாணம் அந்திசந்தி சாப்பிடவும் இச்சாபத்தியம் கடுகு நெல்லெண்ணை கூடாது ஊஷ்ணந்தீரும் தேகம்தணியும்.

---

## கரிச்சாஸல லேகியம்.

சீமை கரிசலாங்கண்ணிச்சார் படி (உ) நெரிஞ்சிச்சார்படி (உ) சிறுகீரைச்சார்படி (க)கீழாநெல்லிச்சார்படி (க) இந்தசாறுகள்யாவும்பழயபாண்டத்தில் ஊத்திவைத்துக்கொண்டு,

நாகப்பட்டை, கருங்காலிப்பட்டை, அத்திப்பட்டை, தென்னம்பாளையுள்ளிருக்கும் அரிசி, மஞ்சள், இவைகள் வகைக்கி பலம் (உ௫) யெடுத்து யிடித்து எட்டுபடி ஜெலத்தில்போட்டு அறைப்படி கியாழமாகக் காச்சிவடிகட்டிக்கொண்டு முன்சாறுவகையிருக்கும் பாண்டத்தில்ஊற்றிகலந்துவைத்துக்கொண்டு,

மிளகு, மிளகருணை, சித்தாமுட்டிவேர், பேருமுட்டி வேர், யெலுமிச்சம்வேர், ஆக வகைக்கி பலம் (ரு) இவைகளை கல்லுரலிலிட்டு பஞ்சுபோல்யிடித்து யெட்டுபடி ஜெலத்தில் போட்டு அரைப்படி கியாழமாகயிரக்கி வடித்து முன்பாண்டத்தில் யிருக்கும் மருந்துடன்ஊத்தி அடுப்பில் யேத்தி கொதிக்கவைக்கவும் உடனே பனவெல்லம் பலம் (அ) நல்லவெல்லம் பலம் (அ) பசும்பால் படி (ச) இந்தபாலில் இரண்டுவகை வெல்லமும்போட்டு கரைத்து முன் அடுப்பின்பேரில் யிருக்கும் பாணடத்தில் ஊத்தி கமலாக்கினியாக யெரித்து கொதிக்கச் செய்யவும் எலுமிச்சங்கட்டையால் கிளரவேண்டியது அப்படி கிளரிக்கொண் டிருக்கையில்தானே,

| | |
|---|---|
| சீரகம் | கடுக்காப்பூ |
| சுக்கு | சோஷ்டம் |
| ஏலம் | அக்கிராகாரம் |
| கிராம்பு | அதிமதுரம் |
| ஜாதிக்காய் | தாளிசப்பத்திரி |
| ஜாபத்திரி | மிளகு |
| ஓமம் | திப்பிலி |
| குரோசானியோமம் | திருபலாதி |
| சிறுநாகப்பூ | |

ஆக வகைக்கி பலம் (க) இவைகளை கல்லுரலிலிட்டு யிடித்து சூரணித்து வஸ்திரகாயம்செய்து பசும்நெய் வீசை (உ) தேன் வீசை (உ) ஷடி சூரணத்துடன் * மண்டூர செந்தூரம் ஒருபலம்சேர்த்துக்கொண்டு நெய்யை முன்பாகமருந்தில்லூத்தி கிளரிக்கொண் டிருக்கும்போதே சூரணத்தை சிறுகத் தூவிக் கொண்டுவரவும் அப்படி சூரணம் பூர்த்தியானபிறகு கால்மணி நேரம் கைவிடாமல்கிளரி யிரக்கிவைத்துக்கொண்டு உடனே தேன்விட்டு விதைநீங்கிய திராட்சப்பழம் (ரு) பலம் போட்டு கிண்டி கோப்பையில் வழித்துவைத்துக்கொள்ளவும் காலைமாலையுமாக வேளைக்கி புன்னைக்காயளவு ஒருமண்டலம் சாப்பிடவும்.

* இந்த அனுபோக வயித்தியம் முதற்காண்டம் (ருக) வது பக்கத்தில் சொல்லியிருக்கும் கனமண்டூர செந்தூரம் சேர்த்துக்கொள்ளவும்.

{ இந்தகரிசாலை லேகியத்தால் தீரும் வியாதிகட்கு உறுதிமொழி }

### விருத்தம்.

ஆச்சப்பா பாண்டுவகை யெல்லாம்போகும்
அப்பனே பித்தவெட்டை கைகாலோச்சல்
காச்சப்பா காந்தலுடன் யெரிவுபோகும்
கனமான வாந்தியொடு மயக்கம்தூக்கம்
ஓச்சப்பா விக்கமொடு நீர்சுரப்பு
உத்தமனே கிராணியெலா மொழிந்துப்போகும்
நீச்சப்பா வரோசயங்க ளெல்லாம்போகும்
நிசமாகத் தாயாண நிகழ்த்துவாயே *

## மேகம் உக-க்கும் லேகியம்.

செகப்புநாயுருவிவேர்
செகப்புநெருஞ்சிவேர்
கையாந்தகரைவேர்
மாவிலிங்கம்வேர்
மிளகருணைவேர்
சிவன்வேம்புவேர்
காட்டுக்கருணைவேர்
நீர்முள்ளிவேர்
வில்வவேர்
துத்திவேர்
வெள்ளெருக்கம்வேர்
சீதேவிசெங்கழனிவேர்
நிலைமந்தம்வேர்
வெள்ளைவிஷ்ணுகாந்திவேர்
ஆனைநெருஞ்சிவேர்
பொன்னுங்கண்ணிவேர்
உப்பிலாங்கொடிவேர்
அவுரிவேர்
முடக்கத்தான்வேர்
புங்கன்வேர்
கருஊமத்தன்வேர்
யெட்டிவேர்
ஆடுதின்னாப்பாளைவேர்
வலாரிவேர்
சிறுகட்டுக்கொடிவேர்
ஆவாரம்பட்டை
பூமிசக்கரைக்கிழங்கு
மருதம்பட்டை
பூவரசம்பட்டை
செங்கத்தாரிப்பட்டை
பாவட்டையிலை
புளிக்கருணைக்கிழங்கு

இவைகள்யாவும் வகைக்கு ௧ - பலம் கொண்டுவந்து உலர்த்தி யிடித்து வஸ்திரகாயம் செய்து அறைவீசை நெய்யை அடுப்பிலேற்றி உருகின உடன் சக்கரை பலம் (௰) போட்டுபா குபதமாய் துவிக்கொண்டே கிளரவேண்டியது நெய் போதா

விட்டால் முன்பாகக்காச்சி யேடுகட்டிய பசும்பால்போதுமான மட்டும் நிதானமாய் விட்டுக்கொண்டு கிளரவும் இரக்கும்போது மலைத்தேன் (ரு) பலம் விரையில்லாத பழய திராட்சிபழம் பலம் (ரு) பொடியாகக்கத்திரித்த பாதம்பருப்பு பலம்(ரு)போட்டு கிண்டிவைத்துக்கொள்ளவும் கைப்பு தோன்றுமல் தின்பதற்கு யினிப்பாகவும் வியாதியை கண்டிக்கும் தண்மையுள்ள நல்ல லேகியமென்றறியவும் காலைமாலையாக இருவேளையும் புன்னக்காய் விதம் (உய)நாள்சாப்பிடவும் மீன்,கருவாடு,யிரச்சி, லாகிரி, ஸ்ரீபோகம், புகைசுரட்டு, இவைகூடாது, மேகம் (உக)ம்-தீரும் கருமேகத்தையும் கண்டிக்கும் இச்சாபத்தியம்.

---

# கைகால்பிடிப்புக்குலேகியம்.

| | |
|---|---|
| மாவிலிங்கம்பட்டை | செப்புநெருஞ்சிவேர் |
| சிறுகாஞ்சொரி | முடக்கத்தான்வேர் |
| அமுக்கனுங்கிழங்கு | தாழம்பிதழ்சாறு |
| கண்டங்கத்திரி | பெரண்டைவேர் |
| பரங்கிப்பட்டை | பூனைவணங்கிவேர் |
| நீரடிமுத்து | மிளகரணைவேர் |
| ஓரிலைத்தாமரைவேர் | |

வகைக்கு பலம் (க) கோரோஜனம் விராகநிடை அரிக்கால் கஸ்தூரி விராகநிடை அரிக்கால் ஓமப்பூ விராகநிடை அரிக்கால் இவைகளை சூரணித்துசமயிடை சர்க்கரைகலந்து அந்தி சந்தி திருகடிபிரமாணம் தின்னலாம் அல்லது (க) வீசை விளக்கெண்ணெயில் போட்டு காச்சியும் சாப்பிடலாம் அல்லது (ய ரு) பலம் நெய் அடுப்பிலிட்டு சூரணத்தை கொட்டிகிண்டி வருகையில் நெய்போதாவிட்டால் தேன்போதுமானமட்டும்விட்டு கிளரியிரக்கிவைத்துக்கொண்டு கெச்சக்காய் பிரமாணம் இருபதுநாள் சாப்பிடவும் இச்சாபத்தியம்.

லேகியவகைபாணி

முற்றிற்று.

---

உ

வேலுமயிலுந்துணை.

பத்தாவது

# கியாழவகபரணி.

## பித்தசீதளத்திற்குகியாழம்.

வட்டத்திருப்பி, ஆமையோடு, மிளகு, நிலவேம்பு, காவட்டம்பில்லு காடிகாரம், கரசலாங்கண்ணி, இவைகளை சாம்பலாகவருத்துக்கொண்டு, சூரியகாந்தி, விஷ்ணுகாந்தி, நிலத்துளசி, இம்மூன்றும் பொன்வருப்பாய் வருத்து மேற்படி சாம்பலுடன் போட்டுக்கொண்டு, கருஞ்சீரகம், ஓமம், வெடிக்கவிட்டு, சுக்கு, சன்னராஷ்டகம், சிந்தில்தண்டு, கடுக்காய்த்தோல், களிப்பாக்கு, கடுகுரோகணி, கத்தாழைசருகு, இவைகளை நருக்கிப் போட்டு படிஜெலம்விட்டு கால்படியாக யிரக்கி அந்தியிலும் காலையிலும் வேளைக்கி ஆழாக்கு வீதம் இரண்டுநாள் கொடுக்க நிவர்த்தியாகும்.

## பித்தவாய்விற்கு கியாழம்,

வட்டத்திருப்பி, நிலவேம்பு, மிளகு, மயிலிரகு, பட்டுத்துணி, வசம்பு, இவைகளைசாம்பல் அல்லது பஸ்பமரக வருத்துக்கொண்டு கருஞ்சீரகத்தை வெடிக்கவிட்டு சுக்கு மஞ்சள் கொஞ்சம்போட்டு முக்கால்படி தண்ணீர்விட்டு ஆழாக்குகியாழமாக யிரக்கி இருவேளை சாப்பிடவும் தீரும்.

---

## பித்தவாய்விற்கு வேறுவித கியாழம்.

கோஷ்டம், கொத்தமல்லி, பரிங்கிச்செக்கை, வில்வவேர், சுக்கு, சீரகம், நெல்லுப்பொரி, இவையேழும் சமயிடைபோட்டு அரைப்படி தண்ணீர்விட்டு ஆழாக்கு கியாழமாக இரக்கி இருவேளையும் பாகித்து சாப்பிடவும் இப்படி மூன்றுநாள் கொள்ளத்தீரும்.

## இதுவுமது,

நன்னாரிவேர், அதிமதுரம், சீந்தில்தண்டு, சந்தணத்தூள் சோம்பு, இதுகளையிடித்து கியாழம்வைத்து இருவேளையும் மூன்றுநாள்சாப்பிட சகலசுரமும் கால்பிடிப்பும் தீரும்.

## சாதாரணபித்தத்திற்கு கியாழம்,

சித்திரமூலம், மிளகு, சமயிடைபோட்டு கியாழம்வைத்து யிரக்கும்போது கொஞ்சம் சக்கரைபோட்டு சாப்பிடவும் இப் படி (சு) வேளைகொள்ளவும் சாந்தியாம்.

## பித்தவாய்வினால்கண்ட வயற்றுவலிக்கி கியாழம்.

| | | |
|---|---|---|
| வெட்பாலரிசி | பலம் | ச |
| சீரகம் | ,, | ச. |
| செப்புநெருஞ்சிவேர் | ,, | உ |

இம்மூன்று மருந்தும் சேர்த்துயிடித்து மூன்றுநாளைக்கி இரண்டுவேளையும் கியாழம்வைத்து சாப்பிட வயற்றுநோய் தீரும்.

## சிறுபிள்ளைகட்கு அபானத்தில் இரத்தங்கண்டால் கியாழம்.

வில்வயிலை, துத்தியிலை, செம்பருத்தியிலை, வெள்ளைவெங் காயம் சீரகம் இவைகள் சமமாய்போட்டுயிடித்து கியாழம்வை த்து காலையில்மாத்திரம் கொடுக்க மூன்றுவேளையில் சவுக்கிய மாகும் வாய்ரெணம் கண்டவர்களுக்கு இந்தகியாழத்தை யிரு வேளையாக மூன்றுநாள்கொடுக்க நாபியின்ரெணம் தணிந்து வாய்புண்ணு ஆறிவிடும்.

---

## குளிர்காச்சலில்கண்ட நாவரட்சிக்கி கியாழம்.

வட்டத்திருப்பி, வசம்பு, நிலவேம்பு, நிலப்பூச்சி, மிளகு, இவை (ரு) திறுசும் சட்டியில்போட்டு சீராகக்கருக்கி கருஞ் சீரகம், ஓமம், பொரியவிட்டு அறைப்படி தண்ணீர்விட்டு ஆ ழாக்கு கியாழமாகயிரக்கி இருவேளை கொடுக்கத் தீரும்.

### ஷை காச்சலுக்கு வேறுவிதகியாழம்.

ருத்திரசண்டையைபிட்டிட்டு பிழிந்து அந்தரசத்தில் மிளகு, லவுங்கம், தூளாக்கிப்போட்டு கொடுத்தால் சுரம்விட்டுப் போகும்.

---

## வாதசுரத்திற்குக்யாழம்.

| | |
|---|---|
| வட்டத்திருப்பிவேர் | விஷ்ணுகாந்தி |
| மரமஞ்சள் | மூக்கிரட்டைவேர் |
| பேருமுட்டிவேர் | நொச்சியிலை |
| சுக்கு | கஞ்சாங்கோரை |
| மிளகு | துளசி |
| திப்பிலி | நார்த்தம்வேர் |
| கடுக்கா | நார்த்தம்யிலை |
| காணிக்கா | நொச்சியிலை |
| வெள்ளைப்பூண்டு | சிறுதேக்கு |

இவை வகைக்கி (க) பலம் யிடித்து தூணிநீரில் போட்டு நாலுக்கொன்றாய் கியாழம் வடித்து கொடுக்கவும் பத்தியமாக யிருக்கவும்.

---

### ஊஷ்ணவாயுவிற்கு கியாழம்.

(உ) பலம் சிவதைவேர் கொண்டுவந்து பஞ்சிபோல்யிடித்து ஒருபடி ஜெலம்விட்டு ஆழாக்குகியாழமாகக்காச்சி வடித்து இருவேளை கொடுக்க நிவர்த்தியாகும்:

---

## பல்வலிக்கிகியாழம்.

நீலிமருந்து செடியென்னும் அவுரிச்செடிசமூலம் கொண்டுவந்து நாலுக்கொன்றாய் கியாழம் வடித்து வாய்கொப்பளிக்க பல்வலிதீரும் ச-டு வேளைசெய்யவும்.

கியாழவகைபரணி

முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை.

# பதினோறுவது

# வீரியவிர்த்திவகைபரணி.

## மதனகாமேசுரக்குளிகை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாலைரசம் | களஞ்சி | ௩ | பூனைக்காஞ்சிவித்து | ,, | ௨ |
| லிங்கம் | ,, | க | பூமிசக்கரைக்கிழங்கு | ,, | ௨ |
| முருங்கைவித்து | பலம் | ௨ | நிலப்பனங்கிழங்கு | ,, | ௨ |
| ஜாதிக்காய் | ,, | ௨ | சமுத்திராசோதிவிரை | | ௨ |
| முத்து | ,, | ௨ | ஜாதிப்பத்திரி | ,, | ௨ |
| கிருமபு | ,, | ௨ | சாரப்பருப்பு | ,, | ௨ |
| அபினி | ,, | ௨ | வெண்காரம் | ,, | ௨ |
| கஞ்சா | ,, | ௨ | | | |

இவைகள்யாவும் பொடிசெய்து முத்தின தேங்காய்க்குள் அடைத்துமூடி சாணிபொதிந்து காயவைத்து சிரட்டை கருகும்படி புடம்போட்டெடுத்து சிரட்டைநீக்கி அப்படியேகல்வத்திலிட்டரைத்து பிங்கானில்வைத்துக்கொண்டு கெச்சக்காய்பிரமாணமெடுத்து சக்கரையிற்பொதிந்துசாப்பிடவும், ரு-நாள், எ-நாளுண்டபிறகு போகிக்கவும், வீரியம் கெட்டிப்படும்கலிதமாகாது இதற்குமாற்று எலுமிச்சம்பழம், நித்தியம் மாலையில் இந்தகுளிகை தின்றபிறகு யிரவில் புளிசேர்க்காமல் பால்ஊற்றிக்கொண்டு போஜனம் செய்யவும்.

## ஸ்தம்பனக்குளிகை.

குங்குமப்பூ, அபின், ஆபில்விரை, வகைக்கி ரூபாயிடை-க, ஜாதிக்காய் விராகநிடை-க, இவைகளை கல்வத்திலிட்டு தேன்சிறுகவிட்டு மெழுகுபோலரைத்து கடலையளவு குளிகைசெய்து மாலையில் ௬-மணிக்கு சாப்பிடவும், படுக்கையில் வெத்திலைதின்றுபோகிக்கவும், வீரியமதிகரிக்கும்.

## தாதுபுஷ்டிக்கி அதிசயக்குளிகை.

மிளகு, எள்ளு, கெஞ்சா சரியிடையெடுத்து வெந்ததும் வேகாததுமாய்வறுத்து கலுவத்திலிட்டு தேன்விட்டு மயனம் போலரைத்து காட்டு யிலந்தங்காய் பிரமாணம் குளிகைசெய்து மாலையில் படுக்கைக்கு நாலுமணிநேரம்முன்னுதாய் ஒருகுளிகைதின்று உடனே ஆழாக்குபால் சாப்பிடவேண்டியது புளிப்பும் தண்ணீரும் கூடாது இஷ்டம்போல் போகிக்கலாம்.

## வீரியக்கட்டுக்கு

# அடைக்கலாங்குருவி.

அடைக்கலாங்குருவி ரு-கொண்டுவந்து வயற்றைக்கீரி பிச்சிமுதலான அசுத்தமெல்லாம் எடுத்துவிட்டு துவனா பிரமாணம் அபினி, சாலாம்பிசினி, தாலம்கான், கருவாப்பட்டை, ஜாதிக்கா, சபேத்துமுசலி, சீலாமுசலி, வகைக்கி விராகநிடை ௩, இப்படி ஐந்துகுருவிக்கும் வயற்றில்போட்டுதைத்து க-குருவிக்கு துலாம்நெய்யாக ரு-துலாம் நெய்விட்டு பொன்னிறமாகவறுத்து கல்வத்திலிட்டு எலும்புநீக்கி கொஞ்சகொஞ்சமாய் தேன்விட்டு மைபோலரைத்து காலைமாலை சுண்டக்காய்விதம் சாப்பிடவும் காலையில்காரசாரத்துடன் போஜனம்செய்யலாம் மாலையில் பால்சாதம் சாப்பிடவேண்டியது.

## தாதுபுஷ்டிக்கிபேரீச்சம்பழம்.

நீர்முள்ளிவிரை (உ௬) விராகநிடை அபினிவிராகநிடை (வ) இதை பேரீச்சம்பழத்திற்கு உள்ளேவைத்து சாப்பிடவும் இப்படி காலைமாலை (ரு) நாள் (எ) நாள் சாப்பிடவும்.

## தாதுபெருக்கவெங்காயஉபயோகம்.

வெள்ளைவெங்காயம் அரிந்து நெய்யில்வருத்து சாப்பிடவும் இப்படி வேளைக்கி ஒருவெங்காயமாக இருவேளையும் இருபதுநாள் கொள்ளவும்.

## ஆண்குறிபெருக்க.

ஆண்காக்கை பித்து கொண்டுவந்து கல்வத்திலரைத்து (௩) நாள் தண்டில் தடவிக்கொண்டு நாலாவதுநாள்புணர பெருத்தும் நீண்டும் இருக்கும்.

---

## தாதுபுஷ்டிக்கிலேகியம்.

| | |
|---|---|
| திப்பிலி | இருவேலி |
| சித்தரத்தை | முதல்தரசந்தனம் |
| அமுக்கனுங்கிழங்கு | கருஞ்சீரகம் |
| ஏலரிசி | கிராம்பு |
| கோஷ்டம் | மாசிக்காய் |
| சடாமாஞ்சி | மிளகு |
| அதிமதுரம் | ஜாதிக்காய் |
| தாணிக்காய் | ஜாபத்திரி |
| கடுக்காய் | வால்மிளகு |
| யேலக்காய் | நற்சீரகம் |
| அக்கிராகாரம் | |

இதுசள் வகைக்கி களஞ்சி (௧௰) சுத்திசெய்த கெஞ்சாத்தூள் பலம் (௫) அமுக்கனுங்கிழங்கு பலம்(௨)வெள்ளைகற்கண்டுபலம் (௨) கடைசரக்குகள் யாவும்யிடித்து வஸ்திரகாயம்செய்து வெங்கலப்பாத்திரம் அடுப்பிலேற்றி தேன்சேர் (௰) நெய்சேர் (௰) ஷி பாண்டத்திலூற்றி சீனிசக்கரை வெல்லம் வகைக்கி கால்சேர்போட்டு பாகுபோல்கிளரி பிரகு கெஞ்சா தூளை போட்டு கிளரி அதன்பிறகு மற்றசூரணத்தை கொஞ்சங் கொஞ்சமாய்தூவிக்கிளரிவழித்து கோப்பையில் வைத்துக்கொண்டு வேளைக்கிபாக்களவாக இருவேளையும் (௪௰) நாள் அல்லது(௨௰ நாள்சாப்பிடவும் இச்சாபத்தியம் பசிஅதிகரிக்கும் வாதக்கட்டு வாய்வு, மேகம், உடம்புமெலிவு, உட்புண்ணு, வாந்தி, மயக்கம், இவையெல்லாம்தீர்ந்து தாதுபுஷ்டியுண்டாகும் இந்தலேகியம் சாப்பிடும்போது தேகத்தில சிரங்குஉண்டாகும் அதற்குபயந்து நிருத்தவேண்டாம் விடாமல் சாப்பிட்டுகொண்டே வந்தால் வியாதியெல்லாம் போய்விடும் விந்துஅதிகரிக்கும்இரத்தம் உபிரியாம் தேகபுஷ்டியாம்.

## தாதுபுஷ்டிக்கிசூரணம்.

நிலப்பனங்கிழங்கு வேண்டியமட்டும் கொண்டுவந்து மேற்றோல்சீவி கிழங்குகளை யிடித்து வஸ்திரகாயம்செய்து சமயிடை வெள்ளைசருக்கரைசேர்த்து நித்தியம் திருகடிபிரமாணம் சாப்பிட்டுவர சொரிசிரங்கு வாராது தாதுபுஷ்டி யதிகரிக்கும் விந்துஊறும்.

---

### தாதுவிர்த்திக்கி குடிநீர்,

இரும்பை சிவக்கக்காச்சி ஜெலத்தில்தோய்த்து இப்படி மூன்றுதிறம் தோய்த்து வடிக்கட்டி வைத்துக்கொண்டு அந்த ஜெலத்தை ஒருமண்டலம் தாகத்திற்கு வேணடும்போதெல்லாம் போஜனம் செய்யும்போதெல்லாம் அதேஜெலத்தை உபயோகப்படுத்திவந்தால் தாதுபுஷ்டியுண்டாகும் அன்றியும்குடலிலுள்ளமாசுகளை அருக்கும் சீதளத்தைபிரிக்கும் அஜீர்னபேதி அதிசாரபேதி கிராணி இவைகளை நீக்கும் மூலஉதிரத்தை நிருத்தும் இந்ததண்ணீர் மொத்தமா யல்லாவிட்டாலும் அப்போதைக்கப்போது செய்துக்கொள்ளலாம்.

---

## தாதுபுஷ்டிக்கு ஜாதிக்கா.

ஜாதிக்காயை துளைசெய்து பணவிடை அபினியை உள்ளேவைத்து பேரீச்சம்பழத்தை விளைபோக்கி ஜாதிக்காய்க்கு கவசஞ்செய்து உளுந்துமாவரைத்து அதற்குமேல் கவசஞ்செய்து மூன்றெருவில்புடமிட்டு உளுந்துமாவின்கவசம்வெந்தபிறகெடுத்து மாவின் கவசத்தைநீக்கி கல்வத்திலிட்டு தேன்விட்டரைத்து கடலைப்பிரமாணம் உண்டைசெய்து மாலையில் சாப்பிடவும் உடனே ஆழாக்குபாலில் சக்கரைபோட்டுகாச்சி சாப்பிடவும் ௰-நாள்கொள்ளவும் ,தாதுவிர்த்தியாம் முகம் தேஜசுகொடுக்கும்.

## இன்பமருந்து.

பொன்னம்பர் அல்லது வெள்ளியம்பர், ஒரு நெல்லிடையெடுத்து நீர்தாரையில் சொரிகிவைக்கலேபனம்அதிகரிக்கும்,

ஸ்ரீபுருஷாள் யிருவருக்கும் அதிகயின்பத்தைக்கொடுக்கும்ஷி அம்பரில் ரு-குண்டுமணியிடை மூன்றுனாள் சாப்பிட்டால் குன்மம்முதலிய வயற்றுவலிகள் தீரும்.

## தாதுபுஷ்டிக்கி.

நீர்முள்ளிவிரை, சாலாம்பிசினி, கருவாப்பட்டை சமமாக யெடுத்திடித்து வஸ்திரகாயம் செய்துவைத்துக்கொண்டு கொடியாட்டின்பால் ஆழாக்கில் உ-பலம்தூள்போட்டு காச்சி குடித்துவர கட்டுப்படாத வீரியபுஷ்டியுண்டாகும்.

## தாதுபுஷ்டிக்கி குக்குடக்கருவு.

வெங்காயவிரை கால்பலம் எடுத்து கோழிமுட்டையின் வெள்ளைக்கருவில் கலக்கி குடித்துவர லேபனமும், வீரியமும் அதிகரிக்கும் ஷி விரையை தேனில்கலந்து குடித்தாலும் தாதுபுஷ்டியுண்டாகும்.

## தாதுபுஷ்டிக்கி முள்ளாங்கி உபயோகம்.

செம்முள்ளாங்கிவிரை உ-பலம் ஆழாக்கு எருமைப்பாலில்போட்டு காச்சிக்குடித்துவர தாதுவிர்த்தியாம், விந்து அதிகரிக்கும்,

## தாதுபுஷ்டிக்கி.

பேரரத்தை பொடிசெய்து உஉ-விராகனிடை பொடியை ஆழாக்கு பசும்பாலில்கறைத்து குடித்துவர தாதுவிர்த்தியாகும் நாற்பதுனாள்கொள்ளவும்.

வீரியவிர்த்திவகைபாணி

முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை.

---

பனிரெண்டாவது

# கண்டாவிழ்தபரணி.

## நோய்வராதிருக்க.

அதிமதுரச்சூரணம், சோம்புச்சூரணம், வெள்ளைச்சற்கரை வகை
,, க்கி (க) விராகனிடை சித்திரமூலச்சூரணம் (உ)
,, விராகனிடை, யாவும்ஒன்ருய்க்கலந்து இரண்டு
,, பாகமாக்கி காலையில்ஒருபங்கு மாலையில்ஒருபங்
,, குசாப்பிடவேண்டியது இதேபிரகாரம் சித்தி
,, ரைமாதம் முதல்தேதிமுதல் ஆடிமாதம் கடசி
,, வரையில் சாப்பிட்டு அப்பியாசப் படுத்தினவர்
,, களுக்கு யாதொருநோயும் வராது கணதெளி
,, வுண்டாகும் தீராததலைவலி ஒருதலைவலி சுரம்
,, நீங்கும் பரிக்ஷைபாருங்கள் இதை சாப்பிடுகிர
,, வர்கள் வாரத்திற்கொருநாள் நருவிலிப்பிஞ்சும்
,, ரோஜாப்பூவும் சமயிடைபோட்டிடித்து பனங்க
,, ற்கண்டுபோட்டு காப்பிசெய்து சாப்பிட்டு வர
,, வேண்டியது.

---

நாக்குப்பூச்சியென்னும் பூநாக வுபயோகம்—நாக்குப்பூச்சியை
,, யெள்ளெண்ணெயில் காச்சிக்குடிக்க நாள்பட்ட
,, யிருமலைநிவர்த்திசெய்யும் ரிணங்களில் தடவ ஆ
,, றிப்போகும்.

கண்ணோய்க்கு—சிறுமாஅல்லது நீலாஞ்சனம் கஸ்தூரி முத்து
,, இவைசமமாய் சேர்த்து கலிக்கம்போல் தீட்ட
,, கண்ணோயிகள் அனைத்தும் தீரும்,

சுகபேதிக்குளிகை—சுத்திசெய்தவாளத்துடன் ரோஜாப்பு உல
,, ர்ந்தநெல்லிக்காயின் மேற்றோல் சமயிடைசேர்
,, த்து பழச்சார்விட்டு (ரு) நாள் அரைத்து கடலை
,, ப்பிரமாணம் மாத்திரைசெய்து பெருஞ்சீரகக்
,, கியாழத்தில் கொடுக்க வருத்தமில்லாமல் சுகுண
,, மாகபேதியாகும்.

---

கட்டிகளுக்கு—உடையாத கட்டிகளுக்கு நீலமருந்தை அறை
,, த்துப்பூச வுடையும் இடைவிடாது (சு - ரு)
,, வேளைபூசவும்.

---

பருக்களுக்கு—துத்தியிலையை அறைத்து பருக்களின்மேல்தட
,, வவும் அல்லது க்ஷயிலையை அரைத்து காடி
,, வார்த்து கிளரிக்கட்டினாலும் கரையும்.

---

பருக்கள்உடைய—திராட்சப்பழம் ஆட்டுக்கொழுப்பு சமமாக
,, சேர்த்தரைத்து பருக்கள்மேல் தடவ வுடையும்

---

கட்டிகள்உடைய—சவுக்காரத்தையும் புறாவின்மலமும் சேர்த்
,, தரைத்து பருக்கள் கட்டிகள்மேல் தடவ உடை
,, யும்.

---

வெண்குட்டசாந்தி—வெள்ளைப் பூண்டை நவாச்சாரத்துடன்
,, அறைத்து வெண்குட்டத்தின்மேல் தடவிவர
,, வெண்மைமாறும்.

---

சிரங்கிற்கு—நீரிடிமுத்தின் பருப்பை தயிரில்ஊரவைத்து எலி
,, மிச்சம்பழச்சார் அல்லது காடிவார்த்தரைத்து
,, உடம்பில் பூசிக்கொண்டு உலர்ந்தபிரகு சாணங்
,, தேய்த்து குளிக்க சொரிசிரங்கு முதலியதும்
,, தீரும்.

---

ரிணங்களுக்குநாயுருவி—நாயுருவி சமூலங்கொண்டுவந் திடித்து
,, சார்பிழிந்து யீயவெள்ளையைக்கலந்து ரெணங்
,, களின்மேல் தடவிவர புண்கள் ரிணங்கள் ஆரி
,, விடும்.

---

தெய்வமோதிரம்—சூரியன் சந்திரன் சுக்கிரன் மூவரும் ஒரே
,, ராசியில் சேர்ந்திருக்கும்போது பொன்வெள்ளி
,, சமமாய் சேர்த்து மோதிரம்செய்து அதில்பவ
,, ழம் பொதிந்ததாகச் செய்து வலதுகை விரலி
,, லணிந்தவர் யாவராலும் பூசிக்கப்படுவா ரென்
,, றும் சகலவித பொல்லாங்கி னின்றும் நீங்குவா
,, ரென்றும் பரிட்சையுள்ள அனேகயூனானி பண்
,, டிதர்களும் சிலநூல்களும் சொல்லி யிருக்கின்ற
,, தை யிங்கனம் சுருக்கமாய் யெழுதினோம்.

---

பயம்நீங்க—(எ) அல்லது (கூ)பவழத்தை குழந்தைகளிடுப்
,, பிற்கட்ட நித்திரையில் மருண்டு அழுவதைநீங்
,, கிபரிபூரண நித்திரை செய்யுமென்பது யூனானி
,, ஆயுள்வேதம் சொல்லுகின்றது.

---

தொண்டைவலிக்கி—கோழிமுட்டைவெள்ளைக்கருவுடன் நவா
,, ச்சாரம்சேர்த்து குழைத்துப்பூச தொண்டை
,, வலி யல்லது நோய்தீரும்.

---

நவாச்சாரஉபயோகம்—நவாச்சாரத்தை தேனில் உரைததுப்
,, பூச மயிர்உதிர்வதை நிருத்தும்.

---

இரண்டாவதுபயோகம்—நவாச்சாரத்தை மூலைப்பாலில் உரை
,, த்து கண்களில்பூச கண்மாசுகளை யருக்கும்.

---

மூன்றுவதுபயோகம்—வீடுமுதலிய மனுஷாள் சஞ்சாரம் செய்
,, யுமிடங்களில் விஷப்பூச்சிகள் இருக்க அல்லது

,, வந்து நுழையவாகிலும் கண்டால் அந்தயிடத்
,, தில் கட்டைநெருப்பில் நவாச்சாரத்தைபோட்டு
,, புகைகொடுத்தால் பயிரங்கப்படும் ஒருவித மூர்
,, ச்சையாயும் கிடக்கும்.

---

பல்வலிக்கி—நன்னாரிவேர் கியாழத்தில் காடிகொஞ்சம்விட்டு
,, வாய்கொப்பளித்துவர பல்வலி சுவஸ்தப்படும்.

---

கீல்வாதசாந்தி—நன்னாரிவேர் சூரணத்தோடு சமபாகம் வெள்
,, ளைசருக்கரை சேர்த்து வேளைக்கி ஒரு விராக
,, நிடையாக இருவேளையும் யேழுநாள் சாப்பிட
,, கீல்வாதம் ரொம்பவும் சவுக்கியப்படும் பரிங்கி
,, செக்கைக்கு உள்ளகுணமெல்லாம் நன்னாரிவேர்
,, க்கும் உண்டென்று அரிவீராக.

---

சர்பத்து—ஒருபலம் நன்னாரிவேருக்கு நாலுபலம் தண்ணி
,, விட்டு நாலில்ஒன்றாய்காச்சி யிருத்து அதற்கு
,, சமபாகம் சற்கறைசேர்த்து சர்பத்துபோல்கா
,, ச்சி குடிக்க பழமையான யிருமல் மூச்சடைப்பு
,, பாரிசவாய்வு சாந்தியாம்.

---

ஆராதபுண்ணுக்கு—ஒரு நத்தையை பிடித்துவந்து கம்பியில்
,, கோர்த்து விளக்கில்காட்ட தைலமிரங்கும் அ
,, தை பீங்கானில் பிடித்துக்கொண்டு அதில் கரிய
,, போளம் வாலேந்திர போளம் சமம்சேர்த்து அ
,, ரைத்து ஆராதமேகப்புண்கள் பருக்கள் மேல்
,, பூச சீக்கிரத்திலாரும்.

---

படைகளுக்கு—நத்தையைசுட்ட சாம்பலை தேனில் கலந்து
,, படைகளின் ஓரத்தில்வரும் புண்களின் மேல்
,, பூச சொஸ்தமாகும.

---

வாந்திக்கு—மரக்களான் காயின்சனத இரண்டு விராகனி
,, டையெடுத்து யிராத்திரிக்கு வெந்நீரிலூரவை
,, த்து காலையில் தெளிவாகயிருத்து சாப்பிடவாந்
,, தியாகும் பித்தநீர்வெளிப்படும்.

---

நீர்உடைய—வெள்ளை சார்வேளை யிலையின்சார் (கூ) விராக
,, னிடை, பசும்பால் (௰உ) ரூபாயிடை கலந்து குடி
,, க்க கட்டுபட்ட நீரை உடனே உடைக்கும்.

---

காயகற்பமூலிகை—முத்தின வெள்ளைசாருவேளை வேரில் முத
,, ல்நாள் குண்டுமணிப் பிரமாணம் சாப்பிடவும்
,, இரண்டாநாள் (உ) குண்டுமணி இப்படியேநா
,, ளுக்குநாள் ஒவ்வொன்றதிகப்படுத்தி நாற்பதா
,, வதுநாள் நாற்பதுகுண்டுமணி பிரமாணம் சாப்
,, பிடவும் (சக) நாள் துடங்கி லொவ்வொருகுண்
,, டுமணி குறைத்துக்கொண்டே நாற்பதாவதுநா
,, ள் (க) குண்டுமணியில் நிருத்தவும் இப்படிசெ
,, ய்தவர்களுக்கு ஒருவிதத்திலும் தீராதவாதரோ
,, கங்கள் சுரங்கள் செரிக்காச்சல் பீனிசங்களும்
,, தீரும் இதுகிடையாவிட்டால் காட்டுசாறுவே
,, ளையும் உபயோகப்படுத்தலாம்.

---

காதுவலிக்கிசாம்ராணி—சாம்ராணியை பொடித்து யெள்ளெ
,, ண்ணெயில் போட்டுக் காச்சி காதில் நாலைந்துது
,, ளிவிட (ங) வேளையில் காதுவலி நீங்கும்.

---

முள்வெளிப்பட—ஆற்றுநண்டு அல்லது வயல்நண்டு பிடித்து
,, யிடித்து முள்தைத்தயிடத்தில் வைத்துகட்டமு
,, ள் வெளிப்படும்.

---

முலைசிலந்திக்கி—ஷை ஆற்றுநண்டை பிடித்திடித்து அல்லது
,, அரைத்து முலையின்மேல் வைத்துக்கட்ட முலை
,, சிலந்திரிணம் ஆறும்.

குதிக்கால்அல்லது ஆசனவெடிப்புக்கு—ஷ ஆற்றுநண்டையி
,, டித்து பில்லேதட்டி சுட்டசாம்பலே குதிக்கால்
,, ஆசனவெடிப்பின்மேல் தேனுடன்கலந்து பூச
,, ஆறும்.

---

பெரும்பாட்டுக்கு—இரும்பை சிவக்கக்காச்சி பசும்மோரில்தோ
,, ய்த்து அந்தமோரை சாததகிற்கும் வேண்டிய
,, போதெல்லாம் தாகத்திற்கும் குடித்துவரபெரு
,, ம்பாடு சகலகழிச்சல் பேதியும் கட்டும் சூட்டு
,, உடம்பிற்கு ஆகாது இரச்சி நெய் சேர்த்துக்
,, கொள்ளவும்.

---

படைகட்கு—நண்டுக்கல்லே அறைத்து படைகளின்மேல் பூச
,, நமச்சல்சொரி விலகும் ஷ கல்லேயறைத்து
,, பொன் வெள்ளி சாமான்களேவிளக்க அதிகசோ
,, தியுண்டாம்.

---

மூலரேத்தம்நீங்க—ஒருபிடி துத்தியிலேயை சுத்த ஜெலத்தில்
,, போட்டு ஒருயிராத்திரி ஊரவைத்து காலேயில்
,, பிசைந்து யிருத்துக்கொண்டு அத்துடன் சம
,, பாகம் பசும்பால்விட்டு குலிக்கிசாப்பிடவும் இப்
,, படி (௩) நாள் (௫) நாள் அல்லது (எ) நாள் சா
,, ப்பிடவும் கடசிநாளில் சக்கரைசேர்த்து சாப்பி
,, டவும் மூலவுதிரம் நீங்கிவிடும்.

---

மேகத்திமிர்வியாதிக்கி—துத்திச்செடியின்கிளே அல்லது காம்பு
,, களே கத்தையாகக்கட்டிக்கொண்டு வேண்டியமு
,, ட்டும் பசும்பால் அடுப்பேற்றி தீயெரித்து ஷ
,, துத்திக்காம்புகளால் துழாவிக்கொண்டே யிருந்
,, தால் சுண்டிவரும் அதன்பிறகுயிரக்கி ஒருயிரா
,, த்திரி முழுதும் அசையாமல் ஆரவைத்து காலே
,, யில்பார்க்க உரைந்து சக்கரைபோலாகும் அதி
,, ல் நாலுக்கொருபங்கு யேலரிசிபொடித்து சேர்
,, த்து வைத்துக்கொண்டு அந்திசந்தியாக இருகடி

" பிரமாணம் நாற்பதுநாள் சாப்பிட்டுவர திமிர்,
" சோம்பல், மேகஊரல், மேகவியாதிகள், யாவும்
" நீங்கும் இச்சாபத்தியமிருக்கவும்.

---

ரிணங்கள்ஆர—துரிசியைபொடித்துதேங்காயெண்ணெயில்விட்
" டுகல்வத்திலிட்டு அரைத்து ரிணங்களில் தடவி
" வர ஆரிப்போகும் பேன்கொட்டை ஏலரிசியும்
" கொஞ்சம் சேர்க்கலாம்.

---

நீரொழுக்கிற்கு—திவிதாட்சிபழத்துடன் மிளகும் சமமாய்சேர்
" த்தரைத்து சாப்பிட கல்லடைப்பு நீரொழுக்கு
" நீங்கும்.

---

வாய்வேக்காட்டிற்கு—அதிகாலையில் திருநீற்றுபச்சிலைவாய்கொ
" ண்டமட்டும் மென்றுதின்னநீங்கும் (ரு-எ)நாள்
" தின்னவும்.

---

சயித்தியத்திற்கு—அரிசிதிப்பிலியை பொடிசெய்து பச்சைவெ
" த்திலைசாறும் தேனும் சமமாய்சேர்த்து குழை
" ந்தைகளுக்கு கொடுக்க சயித்தியம், கோழை,
" சுரம், முதலியதும் தீரும்.

---

சாதாரணயிருமலுக்கு—ஆனைத்திப்பிலியை பொடிசெய்து தே
" னில்குழைத்து சாப்பிட யிருமல் யீளையைபோ
" க்கும் அஜீரணத்தை மாற்றும் வயற்று உப்பி
" ஷத்தை நீக்கும்.

---

வாய்வேக்காட்டிற்கு—தாணிக்காயை சுட்டு சூரணம் செய்து
" சமஙிடை சக்கரைசேர்த்துநிதம்ஒருவிராகநிடை
" யாக வென்னீரில் சாப்பிட்டுவர வாயில் அதிக
" நீர் ஒழுக்கல் கட்டுப்படும், கண்கள்குளிரும்.

---

பல்வலிக்கி—தாளிசப்பத்திரியை பொடிசெய்து பல்லில்தே
" ய்க்க வலிதீரும் யீறுபலப்படும்.

சர்பத்து—தாழம்பூவின்வேர் கியாழமிட்டு அதிற் சக்கரை
,, சேர்த்து சர்பத்துபோல் காச்சி சாப்பிட்டுவந்
,, தால் சொரிசிரங்கு, தினவு, படைகள் மாறும்
,, தேகவலிவுதரும்.

---

சொரிசிரங்கிற்கு—அரைப்படி நல்லெண்ணெயில் செந்தாழைப்
,, பூவின்யிதழ்களைப்போட்டுபூமிபுடமாக யிருபது
,, நாள்புதைத்து வைத்து பிரகெடுத்து தேகத்தி
,, ற்பூசிவர மேகரிணங்கள், சொரிசிரங்கு, தினவு,
,, படைகள்தீரும் தேகம்சுத்தியாம் அவயவங்களு
,, க்கு வலிவுதரும்.

---

அம்மைகாணுதிருக்க—மேற்கூரியபடி பூமிப்புடம்வைத்தெடுத்
,, ததாழம்பூஎண்ணெயை அம்மைகாணுத பிள்ளை
,, கட்கு மாதம் (க) க்கு (ரு) அல்லது (கூ) நாள்
,, வீதமாக அந்தந்தமாதம் முதலில் கொடுத்துக்
,, கொண்டு வரில் ஒருவித அம்மையுங்காணுது அ
,, ப்படி அம்மைவந்தாலும் (ச-ரு) கொப்பளத்தி
,, ற்கு அதிகமாய் காணமாட்டாது.

---

ரிணங்களார—ரிணங்கள் அல்லது புண்ணுகளை சிக்காய்தேய்த்
,, துகழுகிவிட்டு தாழம்பூசுட்ட சாம்பலைபோட்டு
,, அப்பிக்கொண்டுவந்தால் ஆரிவிடும்.

---

பெண்கட்கு வெள்ளைகண்டால்—மணத்தக்காளி, தக்காளி, இர
,, ண்டும் சமமாய் இலையுங்காயுமாகப் பரித்துவந்
,, து கியாழமிட்டு உள்ளுக்கு சாப்பிட்டு ஒண்ணு
,, க்குபோகும்போதெல்லாம் யோனியிற்படும்படி
,, யாக தாராளமாய் இந்தகியாழத்தால் அலம்பிக்
,, கொண்டுவர நீக்கும், உள்ளுக்கு யிருவேளையும்
,, சாப்பிடவேண்டியது.

---

தக்காளிகியாழம்—தக்காளி அல்லது மணத்தக்காளியை யிலையு
,, ம் காயுமாகபரித்து கியாழமிட்டு வாய்கொப்பளி

" த்துவர பல்லுநோய், உண்ணுக்குவளர்ச்சி,தொ
" ண்டைநோய், யீரல், வீக்கம்இவைதீரும்,

சோம்புசூரணம்—சோம்புயென்னும் பெருஞ்சீரகத்தை யிடித்
" து சூரணஞ்செய்து அதற்குசமன் சற்கரைசேர்
" த்துகலந்து புட்டியில் வைத்துக்கொண்டு சித்தி
" ரைமாதம் முதற்றேதிமுதல் நிதம் உ - விராகநி
" டையாக ஆனிமீ கடைசிவரையில் சாப்பிட்டு
" வருவோருக்கு அந்தவருடம் முழுமையும் யா
" தொரு வியாதியுமுண்டாகாது.

பேன்சாக—படிகாரத்தை பொடித்து மைபோல் வஸ்திரகாய
" ஞ்செய்து தண்ணியில்கரைத்து தலையில்தேய்த்
" து ஒருஜாமம்சென்று ஸ்தானஞ்செய்ய பேன்யீ
" ர்முதலானதுஞ் சாகும்.

பல்நோய்க்கு—படிகாரமும் கொட்டைப்பாக்கும் சமமாய் கொ
" ண்டுவர்திடித்து வஸ்திரகாயஞ்செய்து பல்லில்
" தேய்த்துவர பல்வலிதீரும்.

தீராதவெள்ளைக்கு—படிகாரத்தை பொரித்து பொடித்து அத
" ற்குசமன் கற்கண்டும் உலர்ந்த நெல்லிக்காயின்
" மேறறோலும் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து
" கலந்துவைத்துக்கொண்டு வேளைக்கி யிரண்டுவி
" ராகநிடையாக நாளொன்றிற்கு மூன்றுவேளையு
" ம் பசுவின்மோரில்கரைத்து சாப்பிடவும், இப்
" படி ஏ-நாட்கொள்ள தீராதவெள்ளை நீர்கடுப்பு
" இவைதீரும், இச்சாபத்திடம் ஒருசமயம் இரும்
" பல்காணுமாகில் பசும்பால் கறந்தவுடன் நுறை
" யோடு சாப்பிடவும்,

மயிர்கருக்க—சூரத்துநிலாவிரையை பச்சையாகக் கொண்டுவந்
" து அத்துடன் மருதோன்றியிலை சமனாகசேர்த்
" து பூசிவர மயிர் கறுத்துவரும்.